பக்கங்கள்: 10


# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | வைகாசி 19 | வெள்ளிக்கிழமை | 02.06.2023 | கதிர் 204

# 2048இல் இலங்கை அபிவிருத்தியடைந்த நாடு அந்த இலக்கை அடைவதே எமது போராட்டம்

## தேசிய நிலைமாற்றத்திற்கான திட்டவரைபடத்தை நாட்டுக்கு முன்வைத்து ஜனாதிபதி ரணில் விசேட உரை

* நாட்டை மீண்டும் கடந்தகாலத்துக்கு செல்ல அனுமதியோம்
* அடுத்த 25 ஆண்டுகளில் அபிவிருத்தி அடைந்த நாடாக மாறும்
* இளைஞர் சமூகம் மீது பெரும் நம்பிக்கை வைத்துள்ளோம்
* அரச - தனியார்துறை ஒத்துழைப்பை அதிகரிக்க கூட்டாய்வு முறை
* மோசடியை ஒழிக்க விசேட செயலணி அமைக்கப்படவுள்ளது



**2048 அபிவிருத்தி அடைந்த ஒரு நாடு. அதுவே எங்களின் இலக்கு. இந்த இலக்கை அடைவதே எங்கள் போராட்டம். நாம் ஒன்றாக நமது எதிர் காலத்தை உருவாக்குவோம். சிறந்ததொரு எதிர்காலத்தை உருவாக்குவோம். இது, எங்கள் அனைவரின் எதிர்காலத்தையும் கட்டியெழுப்பும் ஒரு வேலைத் திட்டம். நமது எதிர் கால சந்ததியினரின் எதிர் காலத்தை மேம்படுத்தும் திட்டமாகும். எனவே, இந்தப் பணிகளின் வெற்றிக்கு நீங்கள் அனைவரும் பங்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.**

**இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

☞ 2

## இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் புதிதாக மேலும் 2 ஆயிரம் ஏக்கர் நிலத்தை வன வளத் திணைக்களம் கையகப்படுத்தும் முன்முயற்சிகளில் ஈடுபட்டிருக்ககின்றது. அதற்கான வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளது என்று மே 27 அன்று காலைக் கதிர் செய்தி வெளியிட்டது. அச் செய்தி மறு தினம் குடாநாட்டுப் பத்திரிகை ஒன்றில் மறுபிரசுரமாகியிருந்தது. ஆனால், அந்தச் செய்தி பச்சைப் பொய் என்று மறுத்திருக்கிறார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

அந்தச் செய்தியிலே யாழ்ப்பாணக் குடாநாட்டின் நல்லூர், சாவகச்சேரி, வேலணை, மருதங்கேணி, சண்டிலிப்பாய், சங்காணை ஆகிய நான்கு

☞ 2

## பஸ் கட்டணம் குறையாது

பெற்றோல் விலை குறைக்கப்பட்டாலும் முச்சக்கர வண்டி மற்றும் பஸ் கட்டணங்கள் குறைக்கப்பட மாட்டாது என்று சங்கங்கள் அறிவித்துள்ளன.

அகில இலங்கை முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவிக்கையில், முச்சக்கர வண்டிகளுக்கான கட்டண மீளாய்வு குழுவொன்று உடனடியாக நியமிக்கப்பட வேண்டும். அதன் பின்னரேயே கட்டணங்கள் தொடர்பில் தீர்மானிக்க முடியும் என்றார்.

இதேவேளை, அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் டீசல் விலையில் திருத்தம் செய்யப்படாமையால் பஸ் கட்டணங்கள் குறைக்கப்படாது என்று தெரிவித்துள்ளது.

அத்துடன், ஏனைய உதிரிப்பாகங்களும் விலைகுறையாத நிலைமைகள் நீடிப்பதாகவும் அச்சங்கம் குறிப்பிட்டுள்ளது.

## காலத்திற்கேற்ற சட்டங்கள் தேவை

நவீன காலத்திற்கு ஏற்ற சட்டங்களை அமுலாக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், தவிசாளருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

சிறிகொத்தவில் உள்ள அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கப்பூரிலும் காலையில் பத்திரிகைகளை வாசிக்க முடியும். ஆனால் இல்லாதவொரு விடயத்தினைக் கூறினால் நூறு டொலர்கள் அபராதத்தினைச் செலுத்த வேண்டும். ஆகவே ஊடகங்களும் காட்டு சுதந்திரத்தினை பயன்படுத்தாது இருக்கவேண்டும். இலங்கையை சிங்கப்பூராக, சீனாவாக, ஐரோப்பாவாக மாற்ற வேண்டும் என்றும் கூறிகின்றார்கள்.

அவ்வாறு மாற்றுவதாக இருந்தால் ஒளிபரப்பு அதிகாரசபை சட்டமூலம் போன்ற நவீன காலத்திற்கு தேவையான சட்டங்களை அமுலாக்க வேண்டும் என்றார்.

## 50 வீத கையிருப்புப் பேணாத நிரப்பு நிலையங்களுக்கு தடை

### அமைச்சர் காஞ்சன எச்சரிக்கை



குறைந்தபட்சம் 50 சதவீதகையிருப்பைபேணாத எரிபொருள் நிரப்பு நிலையங்களின் அனுமதிப் பத்திரத்தை இடைநிறுத்துமாறு பணிப்புரை விடுக்கவுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர அறிவித்துள்ளார்.

புதன்கிழமை நள்ளிரவு முதல் எரிபொருட்களின் விலைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் நேற்று நாடு முழுவதும் பல இடங்களில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசை மீண்டும் காணப்பட்டது.

விலை குறைக்கப்படப் போகின்றது என்கிற எதிர் பார்ப்பில் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் பல தமக்கான கொள்முதல் கட்டளைகளை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்காமல் விட்டதால் பல நிலைங்களில் எரிபொருள் தீர்ந்துவிட்டமையே எஞ்சிய இடங்களில் வரிசை ஏற்படக் காரணமாகியது. விலைக்குறைப்பால் தமக்கு நட்டம் ஏற்படுவதைத் தவிர்க்க வியாபாரிகள் கடைப்பிடித்த இந்த உத்தியால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், சமூக ஊடகம் ஊடாக கருத்துத் தெரிவித்த அமைச்சர், இலங்கை பெற்றோலிய கூட் டுத்தாபனம் மற்றும் இந்திய எண்ணெய் நிறுவனத் திடம் போதுமான அளவு எரிபொருள் உள்ளதால், எரிபொருள் பற்றாக்குறை ஏற்படும் என குழப்பமடைய வேண்டாம் என்று மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

விலை குறையும் என்ற எதிர்ப்பார்ப்பில் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் எரிபொருளை முன்பதிவு செய்யாததால் இந்த நிலமை ஏற்பட்டுள்ளது.

குறைந்தபட்ச கையிருப்பை 50 சதவீதமாக பராமரிக்கத் தவறும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் அனுமதிப் பத்திரத்தை மீள்பரிசீலனை செய்து இடைநிறுத்துமாறு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு பணிப்புரைவிடுத்துள்ளேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 13, 14 சதவீதமாக வட்டியை குறைக்க நாணய சபை முடிவு

வங்கி வைப்புக்கள் மற்றும் கடன்களுக்கான வட்டிவீதங்களை முறையே 13 மற்றும் 14 சதவீதமாகக் குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க அறிவித்துள்ளார்.

நாணயச்சபையின் இவ்வருடத்துக்கான நான்காவது கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றையதினம் மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாணயச் சபைக் கூட்டத்தில் துணைநில் வைப்புவசதிவீதம், துணைநில் கடன்வசதிவீதம் ஆகிய கொள்கைவட்டிவீதங்களை 250 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 13 சதவீதமாகவும், 14 சதவீதமாகவும் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அண்மைய காலங்களில் பணவீக்கமானது எதிர்பார்க்கப்பட்டதை விடவும் மிகவேகமாக வீழ்ச்சியடைந்து வருவதனாலும், பொருளாதாரத்தின் ஏனைய கூறுகளின் சாதகமான போக்கின் விளைவாகவுமே நாணயச் சபை இத்தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

வெளிநாட்டுத்துறையின் செயற்பாட்டிலும் அண்மைக் காலங்களில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது. குறிப்பாகச் சுற்றுலாப் பயணிகளின் வருகை, வெளிநாடுகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் பணம் அனுப்புவது, வெளிநாட்டு முதலீடுகள் போன்றவற்றில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாவின்

☞ 3

### நடாஷா கைது செய்யப்படலாம் என்றால்

## இஸ்லாத்தை இழிவுபடுத்திய பிக்குகளுக்கு என்ன தண்டனை?

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கேள்வி



பௌத்த மதத்தை இழிவுபடுத்தினார் என்ற குற்றச்சாட்டில் நகைச்சுவை தனிநிலைக் கலைஞர் நடாஷா கைது செய்யப்படும்போது ஏன் இஸ்லாம் மதத்தை இழிவுபடுத்திய ஞானசார தேரரும் அவரைப் போன்ற ஏனையவர்களும் கைது செய்யப்படவில்லை என்று கேள்வி எழுப்பியிருக்கிறார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க.

''பௌத்தத்தை வேண்டுமென்றே இழிவுபடுத்தினார் என்று நடாஷா கைது செய்யப்பட்டுள்ளார். கிறிஸ்தவ தேவாலயங்களையும் மசூதிகளையும் எரித்து இஸ்லாத்தை இழிவுபடுத்திய ஞானசாரர் பிக்கு மற்றும் அவரைப்போல் இஸ்லாத்தை இழிவுபடுத்தியவர்களின் நிலை என்ன?

இஸ்லாமியர்களுக்கும் தமிழர்களுக்கும் எதிராகப் பரப்பப்பட்ட பேச்சுக்கள் நடாஷாவின் கருத்துக் களைவிடவும் வீரியமானவை" என்று அவர் தனது சமூக ஊடகங்களில் தெரிவித்துள்ளார்.

பௌத்தம் பெரும் மரியாதைக்கும் மதிப்புக்கும் உரியது. அதேயளவு மதிப்பும் மரியாதையும் ஏனைய மதங்களுக்கும் சமமாகக் கிடைக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

“தான் விருப்பப்படும் எந்த

☞ 3

## மதக் குரோதங்களை இலங்கையில் வியாபாரமாக்கும் அரசியல்வாதிகள்

### சர்வமதத் தலைவர்கள் கண்டம்




மதக் குரோதங்களை அரசில்வாதிகள் வியாபாரமாக்கியுள்ளனர் என்று சர்வமத தலைவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தேசிய சர்வமத போரவையால் நேற்று வவுனியாவில் உள்ள தனியார் விடுதியில் நடத்தப்பட்ட செய்தியாளர்கள் சந்திபபிலேயே அவர்கள் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

அங்கு எஸ். சிவலோகநாத குருக்கள் தெரிவித்ததாவது:

ஒரு சில சுயநலம் கொண்ட மதத் தலைவர்களும் அரசியல்வாதிகளும் நல்லிணக்கத்தினைக் குழப்பக்கூடிய விடயங்களை பெரிதாக்கி வருகின்றனர். இது மிகப்பெரும் கவலைதரும் விடயம். சில அரசியல்வாதிகளும் இந்த மத குரோதங்களை அரசியல் வியாபார பொருளாக்கி அதன் மூலம் அரசியல் லாபம் தேடுகின்றனர்.

வடக்கில் ஆட்சியாளர்களுக்குச் சார்பான தொல்பொருள் திணைக்களத்திற்கு கூறக்கூடிய விடயம், இந்து சமயத்திலும் பல தொல்லியல் இடங்கள் இருப்பதாக வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். அதேபோல் பௌத்த மதத்திலும் உள்ளது.

அவற்றையெல்லாம் கூறப்போனால் பல இடங்களில் பல ஆலயங்களை அமைக்க வேண்டிவரும். நிறைய மாற்றங்கள் செய்ய வேண்டி வரும். அவை தற்போதுள்ள மத

☞ 3

### இலங்கைக்குக் கடத்த முற்பட்ட

## பல மணி நேரத் தேடலின் பின் 32 கிலோ தங்கம் கடலடியில் மீட்பு

இந்தியாவில் இருந்து இலங்கைக்குக் கடத்த முற்பட்டதாகக் கூறப்படும் 32 கிலோ தங்கம் தமிழ்நாடு, இராமேஸ்வரம் கடலடியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இந்தியக்கடலோரக்காவல் படை, இறைவரி புலனாய்வுப் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் சுங்கப் பிரிவினர் இணைந்து நடத்திய தேடுதலில் இந்தத் தங்கப் புதையல் மீட்கப்பட்டுள்ளது.

பெருமளவு தங்கம் கடத்தப்படவுள்ளதாகக் கிடைத்த புலனாய்வுத்தகவல்களை அடுத்து கரையோரக் காவல் படையினர் தமது சுற்றுக்காவலைத் தீவிரப்படுத்தியிருந்தனர்.

மே 29 அன்று சந்தேகத்திற்கிடமான படகு ஒன்றைக் கண்டு அதனை நிறுத்துமாறு சமிக்ஞையிட்டனர். அந்தப் படகு நிற்காமல் சென்றதை அடுத்து அதை விரட்டிச் சென்று பிடித்தனர்.

படகில் இருந்தவர்களைக் கைதுசெய்ததுடன் படகையும் பறிமுதல் செய்தனர். படகில் தங்கம் இருக்கவில்லை. அதனைக் கடலில் போட்டிருப்பார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் அதிகாரிகள் கடலில் தேடுதல் தொடங்கினர்.

நீரடிநீச்சல் பிரிவினரின் உதவியுடன் இரண்டு நாள்களாக நடத்தப்பட்ட தேடுதலின் பின்னர் மே 30 அன்று கடலடியில் இருந்து 32 கிலோ தங்கம் மீட்கப்பட்டது. அதன்



பெறுமதி இந்திய மதிப்பில் 20.2 கோடி ரூபாய் என்று தெரிவிக்கப்படுகின்றது. சில மாதங்களுக்கு முன்னரும் இதுபோன்று பெருந்தொகையான தங்கத்தை இந்திய அதிகாரிகள் கடலில் இருந்து சுழியோடிகள் மூலம் மீட்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பிரதேசசெயலாளர் பிரிவுகளிலும் கண்டல் தாவரங்கல், (மங்கோஸ்) நிற்கும் பிரதேசங்கள் அனைத்தும் வனவளத் திணைக்களத்திற்கு உரியது என உரிமைகோரப்படவுள்ளதாகவும் விவரித்திருந்தோம்.

இவ்வாறு வனவளத் திணையபுதிதாக கோரப்படும் பிரதேசங்கள் 800 கெக்டேயர் அல்லது 2ஆயிரத்து 400 ஏக்கர் வரையிலானது, அதனைத் தமது ஆளுகையென வர்த்தமானி வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனஎன்றும் அந்தச் செய்தியில் தெரிவித்திருந்தோம். இதனைத்தான் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மறுத்திருந்தார்.

அவர் ஒரு அமைச்சர். மட்டுமல்ல யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர். ஆனால் இங்கு என்ன நடக்கிறது என்பது அவருக்குத் தெரியவில்லை என்பதையே அவரது இந்தக் கூற்று எடுத்துக்காட்டுகின்றது.

வனவளத் திணைக்கள அதிகாரிகள் இந்தவிவரங்களை வெளிப்படுத்திய கூட்டம் மே 25 கிளிநொச்சி மாவட்டச்செயலகக் கேட்போர் கூடதத்தில் மாலை 4 மணிமுதல் 6 மணி வரை இடம்பெற்றது. வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்கள இரு திணைக்களங்களின் பணிப்பாளர் நாயகங்கள், பணிப்பாளர் உட்பட 8 பேரும், ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளர் இ. இளங்கோவன் உள்ளிட்ட அதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டர் கூட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்டம் சார்பில் மேலதிக மாவட்டச் செயலர் (காணி) முரளிதரன், பிரதேச செயலாளர்களான மருதங்கேணி - பிரபாகரமூர்த்தி, நெடுந்தீவு - சத்தியசோதி, வேலணை - சிவகரன், ஊர்காவற்றுறை - மஞ்சுளாதேவி, சாவகச்சேரி - உஷா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இவை அனைத்திற்கும் மேலாக இதே கூட்டத்தில் அமைச்சரும் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் இணைத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவின் கிளிநொச்சி மாவட்ட தனிப்பட்ட இணைப்பாளர் கோடீஸ்வரன் றுசாங்கனும் கலந்து கொண்டிருந்தார்.

இந்தக் கூட்டத்திற்கு அமைச்சின் செயலளாரே அழைப்பு அறிவித்தல் அனுப்பியிருந்தார். இந்தக்கூட்டத்தில் வனவளத் திணைக்கள அதிகாரிகள் தாம் செய்யப்போகும் விடயங்கள் தொடர் பில் மிகத் தெளிவாக விளக்கினர். அத்தோடு தாம் கையகப்படுத்தவுள்ள இடங்களின் வரைபடத்தையும் அதிகாரிகளுக்குப் போட்டுக் காண்பித்தனர். அந்தக் கூட்டத்தில் இருந்த அதிகாரிகள், காடுகள் தொடர்பான விடயத்தில் 1985க்கு முன்பாக இருந்த வரைபடத்திற்குத் திரும்பிச் செல்வது குறித்து ஜனாதிபதி பேசுகின்றாரே என்று சுட்டிக்காட்டியதற்கு, அப்படியானால் கிளிநொச்சி மாவட்டச்செயலகம் அமைந்திருக்கும் இடமும் காடாகத்தான் இருக்கும் பரவாயில்லையா என்று வனவளத்திணைக்கள அதிகாரிகள் திமிர்க் கேள்வியும் கேட்டுள்ளனர்.

இவற்றையெல்லாம் நன்கு விசாரித்து உறுதிப்படுத்திக்கொண்டபின்னரே காலைக்கதிர் அந்தச் செய்தியை வெளியிட்டது.

கூட்டத்தில் கலந்து கொண்ட அதிகாரிகள் ஒவ்வொருவருக்கும் நேரடியாக அழைப்பெடுத்து கூட்டத்தில் வனவளத் திணைக்களத்தினர் என்ன கூறினர் என்பதை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொறுமையாக விசாரிக்கலாம். அவரது இணைப்பு அலுவலரையும் அழைத்து விசாரிக்கலாம். அதையெல்லாம் செய்யாமல், நாட்டு நடப்பு என்ன என்றே தெரியாமல் அதிகாரம் இருக்கின்றது என்பதற்காக உளறிக் கொட்டக்கூடாது.

**- இடிமின்னல் -**

## 2048இல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக கடந்த 9 மாதங்களில் இந்த ஆட்சி மேற்கொண்ட நடவடிக்கைகள்மற்றும்இலங்கை ஆட்சியாளர்களின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து நேற்று நாட்டு மக்களுக்கு உரையாற்றினார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அதில் அவர் தெரிவித்ததாவது:

நமது நாட்டின் பொருளாதாரத்தை கையாளும் பொறுப்பை நான் ஏற்றது முதல், பொருளாதாரம் குறித்த உண்மையானதகவல்களை அவ்வப்போது உங்களுக்கு வெளிப்படுத்தி வருகிறேன். பொருளாதாரத்தின் உண்மையானதோற்றத்தை எப்போதும் வெளிப்படைத்தன்மையுடன் உங்கள் முன் வைக்க விரும்பினேன். நாட்டின் உண்மை நிலை, அந்தச் சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கான வழி மற்றும் நாட்டுக் காக நாம் அனைவரும் ஆற்றவேண்டிய பங்கு தொடர் பாக நான் உங்களை தெளிவுபடுத்தினேன்.

நெருக்கடியான பொருளாதாரத்தால் பல இன்னல்களை சந்தித்து வந்த நாம் தற்போது மெதுமெதுவாக சாதகமான நிலையை அடைந்து வருகிறோம். நலிவடைந்து, வீழ்ச்சியடைந்த நமது பொருளாதாரம், ஓரளவுக்கு உறுதியாகி வருகிறது.

கடந்த காலத்தில் நாம் கையாண்ட சரியான நடைமுறைகளினால் இந்த நிலையை எங்களால் அடைய முடிந்தது. அதேபோன்று நாம் அனைவரும் ஒன்றிணைந்து சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டோம். அந்தச் சவால்களை எதிர்கொள்ளும்போது பல்வேறு சிரமங்களை சந்தித்தோம்.

தாய் நாட்டிற்காக இந்தக் கஷ்டங்களைத் தாங்கிய உங்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வழியில் இன்னும் சில காலம் தொடர்ந்து செல்வதன் மூலம் கஷ்டங்களையும் துன்பங்களையும் குறைத்து, சிறந்தவொரு பொருளாதாரத்தை எமக்கு ஏற்படுத்த முடியும். இலங்கை இப்போது முன்னேற்றகரமான மற்றும் வளமான பயணத்தை மேற்கொள்ளத் தயாராகியுள்ளது.

அந்தப் பயணத்தை நாம் எவ்வாறு தொடர வேண்டும்? அதற்கு நாம் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் என்ன? என்பது முக்கியமானது. எதிர்காலத்தில் நாங்கள் பின்பற்றும் நடவடிக்கைகள் குறித்து இன்று நான் உங்களுக்கு விளக்கப் போகிறேன். எங்கள் எதிர்கால திட்டவரைபடம் இது.

எமது முன்னோக்கிய பயணத்தில் வெற்றியடைவதற்கு இலங்கையின் பொருளாதாரம் மற்றும் சமூகத்தில் முழுமையான மாற் றம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை நான் இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியுள்ளேன். இந்த பொருளாதார சீர்திருத்தங்கள், மறுசீரமைப்பு மற்றும் நவீனமயமாக்கலை 2023 நிதி அறிக்கையில் நான் குறிப்பிட்டேன். சிறந்த எதிர்காலத்தை கட்டியெழுப்ப இந்த நடவடிக்கையை நாம் இப்போதே எடுக்கவேண்டும்.

இங்கு நாம் எடுக்கும் முடிவுகள் கடினமாகவும் வேதனையாகவும் இருக்கும். பிரபலமாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் சரியான கொள்கைகளின்படி இந்தக் கடினமான பாதையில் நாம் தொடர்ந்தால் மட்டுமே நம் நாட்டை மீண்டும் உயர்த்த முடியும். இந்தப் பாதையில் நாம் தொடர்ந்தால்தான் எதிர்கால சந்ததியினர் சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழக்கூடிய நாட்டை உருவாக்க முடியும்.

பாரம்பரிய அரசியலில் ஈடுபடும் சில குழுக்கள் பொரு ளாதார மறுமலர்ச்சியைத் தடுக்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. பொருளாதார மறுசீரமைப்புக் குறித்து மக்களிடம் தவறான அச்சத்தை உருவாக்க முயற்சிக்கின்றன. எப்போதும் கூறும் 'நாட்டை விற்கப் போகின்றார்கள்' என்ற கோத்துடன் தொடர்ந்தும் மக்களைத் தவறாக வழிநடத்த முயற்சிக்கின்றன.

நாட்டின் பொருளாதாரத்தைமேம்படுத்தமுயற்சிகள் எடுக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்கள் முன் வைக்கும் கோம் இதுதான். ஐம்பதுகளிலும் கூட நாடு விற்கப்படுகிறது என்று சொல்லி மக்களை ஏமாற்றினார்கள். அறுபதுகளிலும் நாட்டை விற்பதாகச் சொல்லி மக்களைத் தவறாக வழிநடத்தினார்கள்.

எழுபதுகளிலும் நாடு விற்கப்படுகிறது என்று மக்கள் மத்தியில் ஒரு அசாத்திய பயத்தை உருவாக்கினார்கள். எண்பதுகளில் கூட நாடு விற்கப்படுகிறது என்று சொல்லி மக்களை அச்சத்தில் ஆழ்த்தினார். அன்றுமுதல் இன்றுவரை இந்தக் குழுக்கள், நாட்டை விற்கப் போகின்றார்கள் என்ற கோசத்தை முன்வைத்து பொருளாதார சீர்திருத்தங்களை சீர்குலைக்க முயன்று வருகின்றன.

இனி, இது போன்ற கோஷங்களுக்குநீங்கள் ஏமாற மாட்டீர்கள் என்று எங்களுக்கு தெரியும். நாட்டை முன்னேற்ற நாம் அனைவரும் கடுமையாக உழைத்து, நம்மை அர்ப்பணிக்க வேண்டியுள்ளது. 2048 ஆம் ஆண்டுக்குள் உலகில் வளர்ச்சியடைந்த நாடாக மாற வேண்டும் என்ற நமது இலக்கை அடைய வேண்டும். நவீன உலகத்துக்கும், நவீன தொழில்நுட்பத்துக்கும் ஏற்றவாறு நமது பொருளாதாரத்தை வடிவமைக்காவிட்டால், பின்னோக்கிச் செல்ல வேண்டி ஏற்படும். இத்தகைய விலகலின் விளைவு, நாடு பொருளாதார காலனித்துவமாக மாறுவதுதான்.

நாம் முன்னோக்கிச் செல்வோம். போட்டி நிறைந்த உலகை எதிர் கொள்ளும் வகையில் நமது பொருளாதாரத்தை உருவாக்குவோம். நாட்டுக்குத் தேவையான பொருளாதார மறுசீரமைப்புகளை முறையாக நிறைவேற்றுவோம்.

தவறான கொள்கைகள், பலவீனமான நிகழ்ச்சிகள், தோல்வியடைந்த வேலைத் திட்டங்கள் ஆகியவற்றை ஒரு ஒழுங்கான பாதையில் முன்னெடுப்பதையே பொருளாதார மறுசீரமைப்புகள் மூலம் நாம் மேற்கொள்கிறோம்.

பழைய பாரம்பரிய முறைகள் மூலம் வங்குரோத்து நிலையை அடைந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது. நாம் புதிதாகச் சிந்தித்து புதிய பயணத்தை ஆரம்பிக்க வேண்டும்.

- பொருளாதார சீர்திருத்தங்களின் மூலம் கிடைக்கும் பிரதிபலன்கள் என்ன?

- உங்களின் வாழ்க்கைச் சுமை குறையும். வாழ்க்கைத் தரம் உயரும். அது தவறா? அது நாட்டை விற்பதாக அமையுமா?

- மிகச் சிறிய அளவில் இருந்து வலுவான பெரும் வளர்ச்சி வணிகங்களை ஏற்படுத்த புதிய வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன. அது தவறா? இது நாட்டை விற்பதாக அமையுமா?

- நாட்டின் ஏழ்மையான மற்றும் ஆதரவற்ற பிரிவினரைப் பாதுகாப்பதன் மூலம், அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நிவாரணம் மற்றும் வசதிகள் வழங்கப்படுகின்றன. இது தவறா? இது நாட்டை விற்பதாக அமையுமா?

- அச நிறுவனங்களால் ஏற்படும் கோடிக்கணக்கான ரூபா நட்டத்தை ஈடுகட்ட மக்கள் மீது சுமையை ஏற்றும் மரபு முடிவுக்கு வருகிறது. இது தவறா? இது நாட்டை விற்பதாக அமையுமா?

- வெளிப்படையான முறையில் பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்புடன் செயற்படுவதற்கானஒருநடைமுறை உருவாக்கப்படுகின்றது. இது தவறா? இது நாட்டை விற்பதாக அமையுமா?

- உலகில் வேகமாக வளர்ந்து வரும் நாடுகளில் ஒன்றாக இலங்கை மாறி வருகிறது. இது தவறா? இது நாட்டை விற்பதாக அமையுமா?

எமது நாட்டின் நிலையான வளர்ச்சி மற்றும் வெற்றியை அடைய இந்த பொருளாதார மறுசீரமைப்புகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். இந்த மறுசீரமைப்புக்கள் ஊடாக, இலங்கையின் நவீனமயமாக்கலை துரிதப்படுத்தி, அர்த்தமுள்ளதாக்கவும், எமது சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்தவும், அபிவிருத்தி முயற்சிகளுக்கு சர்வதேச சமூகத்தை அதிகளவில் பங்களிக்கச் செய்யவும் சந்தர்ப்பங்கள் வழங்கப்படும்.

இந்தப் பயணம் எளிதானதல்ல என்பதை நாம் அறிவோம். மேலும் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள நேரிடும் என்பதையும் நாம் அறிவோம். ஆனால், அந்தச் சவால்கள் அனைத்தையும் வெற்றிகொள்வதற்கான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். நாட்டுக்கு நல்லதைச் செய்வதில் நமது அரசாங்கம் எப்போதும் உறுதியுடன் உள்ளது.

இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் இருந்த நிலைக்குளங்கள் தாய்நாட்டை மீண்டும் இட்டுச்செல்ல யாரையும் அனுமதிக்க மாட்டோம். அன்று மக்கள் எதிர்கொண்ட நிலையை இன்று பலர் மறந்துவிட்டனர். நாட்டின் பொருளாதாரம் 7.8 சதவீதத்தினால் சுருங்கியது. அந்நியச் செலாவணிக்கையிருப்பு அதல பாதாளத்துக்குச் சரிந்தது.

உலகில் அதிக பணவீக்கம் உள்ள நாடுகளில் நாமும் இணைந்தோம். வெளிநாட்டுக் கடனை திருப்பிச்செலுத்த முடியவில்லை. நாடு வங்குரோத்து நிலைக்குச் சென்றது. உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது. எரிபொருள் மற்றும் எரிவாயு பெற பல நாட்கள் வரிசையில் காத்திருக்க வேண்டி ஏற்பட்டது. உரம் இல்லாததால் விவசாயம் பாழடைந்தது. விளைச்சல் இல்லாமல்போனது.

விவசாயிகள் ஆதரவற்றவர்களாக இருந்தனர். வர்த்தகம் சரிந்தது. தொழில், வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டன. மருத்துவமனைகளில் மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டது. பாடசாலைகள் மூடப்பட்டன. 10-12 மணிநேரம் மின்வெட்டு ஏற்பட்டது. மக்கள் வாழ்வதற்கு இருந்த வழிகள் அனைத்தும் இல்லாமல்போனது. நாடு தலைகீழாக மாறியது. மக்கள் வீதிகளுக்கு வந்தனர்.

மக்கள் துன்பங்களைத் தாங்க முடியாமல் திணறினர். போராட ஆரம்பித்தார். இப்படிப்பட்ட இக்கட்டான பின்னணியில் இந்த நாட்டின் பொருளாதாரத்தை, பிரதமராக நான் பொறுப்பேற்றேன். எனக்கு ஒரே ஒரு சக்தி மாத்திரமே இருந்தது. அது தான், எனது தாய்நாட்டை இந்தக் கடினமான தொங்கு பாலத்தைக் கடந்து முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் என்று என்னுள் இருந்த நம்பிக்கையும் உறுதியும்.

நாட்டை ஸ்திரப்படுத்தும் நடவடிக்கையை நாம் முதலில் ஆரம்பித்தோம். நாடு கடுமையான நிதிக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டது. இந்த நெருக்கடியிலிருந்து மீள ஒரே வழி சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவது மட்டுமே என்பதை நாங்கள் முன்கூட்டியே அறிந்தோம்.

எனவே நாம் அவர்களுடன் பேச்சை ஆரம்பித்தோம். பல சுற்றுப் பேச்சுக்களுக்குப் பிறகு, சர்வதேச நாணய நிதியம் எங்களுக்கு நீடிக்கப்பட்ட கடன் வசதியை வழங்க ஒப்புக்கொண்டது. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட பிற நிதி நிறுவனங்களுடன் இணைந்து, நாட்டிற்கு கடன் உதவி பெறும் திட்டங்கள் தொடங்கப்பட்டன.

இதன்போது, அண்டை நாடான இந்தியா எங்களுக்கு நிறைய உதவிகளைச் செய்தது. பங்களாதேஷ் ஆதரவளித்தது. ஜப்பான் மனிதாபிமான உதவிகளை வழங்கியது. சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் போன்ற எங்களின் முக்கிய கடன் வழங்குநர்கள் மற்றும் பரிஸ் கிளப் ஆகியவை எமது கடன் மறுசீரமைப்புக்கு ஒப்புக்கொண்டன. இந்த அனைத்து நாடுகளுக்கும் நிறுவனங்களுக்கும் இலங்கை மக்கள் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசசெலவினங்களைக் குறைத்ததன் மூலம் எங்களால் அதிக நிதியை சேமிக்க முடிந்தது. நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு எமது வெளிநாட்டில் உள்ள இலங்கைப் பணியாளர்கள் பெருமளவில் பங்களிப்புச் செய்கின்றனர். 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டின் முதல் காலாண்டில் வெளிநாட்டில் உள்ள இலங்கைப் பணியாளர்கள் அனுப்பிய பணம் 80.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. புதிய வரிக் கொள்கைகள் காரணமாக 2023ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 210 பில்லியன் ரூபா மேலதிக வருமானம் கிடைத்துள்ளது.

கடின உழைப்பு, அர்ப்பணிப்பு மற்றும் ஒரு இலக்குடன் சரியான பாதையில் செல்வதன் விளைவுகளை இன்று நாம் அனைவரும் அனுபவிக்கிறோம். 70 சதவீதமாக உயர்ந்திருந்த பணவீக்கம் தற்போது 25.2 சதவீதமாக குறைந்துள்ளது. இதனால் வாழ்க்கைச் சுமை படிப்படியாகக் குறைந்து வருகிறது. ஒட்டுமொத்த சமூகமும் இந்த ஆறுதலை உணர ஆரம்பித்துள்ளது.

அடுத்து, நாங்கள் எப்படி முன்னோக்கிச் செல்லப்போகின்றோம் என்று நான் உங்களுக்கு விளக்க விரும்புகிறேன். எமது அடுத்த நடவடிக்கை அல்லது திட்ட வரைபடத்தில் நான்கு முக்கிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளோம். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நாம் நமது எதிர்காலத்தை நான்கு முக்கிய தூண்களில் கட்டியெழுப்புகின்றோம்.

### முதலாவது தூண் - அரச நிதி மற்றும் மறுசீரமைப்பு

அரச நிதி மற்றும் நிதி மறுசீரமைப்பு தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டோம். அந்த ஒப்பந்தத்துக்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றோம்.

வரிக் கொள்கை, வருமான நிர்வாகம் மற்றும் செலவு முகாமைத்துவம் ஆகிய துறைகளில் நாம் மறுசீரமைப்புக்களைத் தொடங்கியுள்ளோம். அந்த மறுசீரமைப்புகளை நாம் முன்னெடுத்துச்செல்கிறோம்.

அரச கடனை நீண்ட காலத்திற்கு நிலையான அளவில் பேணுவதற்கு அவசியமான மறுசீரமைப்புப் பணிகளை அறிமுகப்படுத்தி வருகிறோம். இலங்கையின் பொருளாதாரம் குறித்து நம்பிக்கையை வலுப்படுத்தும் வகையில் புதிய பொருளாதார கொள்கைகளை அறிமுகப் படுத்துகின்றோம்.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் நோக்கில், 2022 மே மாதம் முதல் பல்வேறு செலவுக்கட்டுப்பாடுகளுக்கான சுற்றறிக்கைகளை அமுல்படுத்தியுள்ளோம்.

தேவையற்ற செலவுகளை மேலும் குறைக்க நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அரசசெலவினங்களை முடிந்தவரை மட்டுப்படுத்த வேண்டும் என்று அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளோம்.

1) தேவையற்ற செலவுகளை நிறுத்துதல்.

2) செலவினங்களைக் குறைத்து, அரசாங்க செயல்பாடுகளை எளிமையாக்குதல்.

3) செலவினங்களைக் குறைத்து அரசாங்க செயற்பாடுகளை திட்டமிடுதல்.

4) செலவுகளைக் குறைப்பதற்கும் தரமான சேவைகளை வழங்குவதற்கும் தானியங்கு மற்றும் டிஜிட்டல் முறைகளைப் பின்பற்றுவது குறித்து எமது அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

### இரண்டாவது தூண் - முதலீட்டு ஊக்குவிப்பு

ஒரு நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த முதலீட்டை ஊக்குவிப்பது மிக முக்கியமான காரணியாகும். அரச துறை மற்றும் தனியார் துறையின் பரஸ்பர ஒத்துழைப்பின் மூலம் பொருளாதார வளர்ச்சியை நோக்கிய நமது பயணத்தை வலுப்படுத்த முடியும்.

தென்கொரியா, சிங்கப்பூர் போன்று, நமது நாட் டையும் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமாக உருவாக்குவதே எமது அபிலாஷையாகும். அதே போன்று, புதுப்பிக்கத்தக்க வலுசக்தி, பசுமை ஹைட்ரஜன் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் போன்ற நவீன மற்றும் நிலையான முயற்சிகளில் கவனம் செலுத்தவும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

இதற்கான சிறந்த உதாரணங்களை இந்தியாவின் ஆந்திரா பிரதேசத்தில் நாம் கண்டுகொள்ளலாம். இத்தகைய நவீன தொழில் நுட்பங்கள் மற்றும் நிலையான முயற்சிகள் இலங்கையின் பொருளாதாரத்தை முழுமையாக மாற்றும் செயல்பாட்டில் முக்கியமான விடயங்களாகும்.

இத்தகைய நவீன தொழில்நுட்ப மற்றும் நிலையான முயற்சிகளை செயல்படுத்த, தமது வர்த்தக முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு தனியார் துறையினரைக் கேட்டுக்கொள்கிறோம். முன்மொழிவுகளுக்கான இந்த அழைப்பு, வெகுசன ஊடகங்கள் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்டு வெளிப்படைத் தன்மை மற்றும் முறையான முறையில் முன்னெடுக்கப்படும்.

முதலீட்டுத்திறன், வேலை வாய்ப்பு உருவாக்கம், ஏற்றுமதிப் பங்களிப்பு மற்றும் பொருளாதாரப் பங்களிப்பு ஆகிய நான்கு அளவுகோல்களின் அடிப்படையில் இந்த முன்மொழிவுகள் தேர்ந்தெடுக்கப்படும்.

இந்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கான கொள்கையை வகுக்க, நாம் புதிய பொறிமுறையொன்றை செயல்படுத்துவோம். அந்தப் பொறிமுறையை நாம் கூட்டாய்வு நடைமுறை என அடையாளப்படுத்துவோம்.

அரச துறை மற்றும் தனியார் துறையினருக்கு இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் வடிவமைக்கப்பட்ட இந்த திட்டத்திற்கு, அந்தந்த துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்கள், அரச அதிகாரிகள், முன்மொழிவு அல்லது திட்டம் தொடர்பான துறைசார் அமைச்சுகளின் அதிகாரிகள் மற்றும் தனியார் துறை பிரதிநிதிகள் இணைத்துக்கொள்ளப்படுவர்.

அவர்கள் இந்த முன்மொழிவுகள் மற்றும் திட்டங்களை 06 வார காலத்திற்கு ஆழமாக கலந்துரையாடுகின்றனர். தனியார் துறைப் பிரதிநிதிகளின் கருத்திற்கும் இடம்கொடுத்து, அவர்களின் முதலீடுகளுக்கு உள்ள அனைத்துத் தடைகளையும் நீக்க, குழுக்க ளாக ஒன்றிணைந்து செயல்படுவதற்கான திட்டங்கள் இதன்போது தயாரிக்கப்படுகின்றன.

செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் திட்டம் தொடர்பாக விரிவாக கலந்துரையாடி, தங்கள் திட்டங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஒழுங்கமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். கூட்டாய்வு நடைமுறை செயல்பாட்டில் இணையும் அரச தரப்பினர் இந்த ஆறு வாரங்களுக்குள் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முழுமையாகக் கவனம் செலுத்துவர்.

கூட்டாய்வு நடைமுறை செயற்பாடுகளை வெற்றியடையச்செய்வதற்கு அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தும் வகையில் நானும் அமைச்சரவை அமைச்சர்களும் இந்த நிகழ்வுகளில் பங்கேற்க எதிர்பார்க்கின்றோம்.

கூட்டாய்வு நடைமுறை செயல்முறை மூலம் மூன்று முக்கிய நோக்கங்களை அடைய நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

1) அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக முன்மொழிவுகள் மற்றும் திட்டங்கள் மூலம் நமது பொருளாதாரத்தின் மீட்சியை துரிதப்படுத்தல்.

2) புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்.

3) வேலைத்திட்டங்களுக்கு உள்ள தடைகளை நீக்கும் வகையில் சுதந்திர பொறிமுறைகள் மூலம் எதிர்கால திட்டங்களை செயல்படுத்தி, அரச பொறிமுறையை மேலும் செயற்றிறன்மிக்கதாக மாற்றுதல்.

4) இலங்கையின் வர்த்தக நடைமுறைகள் கடுமையான பாதுகாப்பு தடைகள் மூலம் கட்டமைக்கப்பட்டுள்ளன. தற்போது இந்த அனைத்தையும் விடு விப்பதற்கான காலம் வந்துவிட்டது. முதலீட்டாளர்களை உதாசீனப்படுத்தும் வகையிலும் பலவீனப்படுத்தும் வகையிலுமே பல நடைமுறைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையை நாம் மாற்றுவோம். அதன் மூலம் முதலீட்டாளர்களுக்கு கவர்ச்சிகரமான ஒரு நாட்டை உருவாக்குவோம்.

### மூன்றாவது தூண் - சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு

சமூகப் பாதுகாப்பிற்காக நாங்கள் கூட்டாய்வு செயல் முறையை பின்பற்றுகிறோம். அரசாங்க அமைச்சுகள், திணைக்களங்கள், முகவர் நிலையங்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் துறைசார் நிபுணர்களை இந்த சமூகப் பாதுகாப்பு கூட்டாய்வு செயல்பாட்டில் ஈடுபடுத்தவும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

பல வருடங்களாக இந்த நாட்டு மக்கள் எங்களி டம் மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். அவை,

1) சமூகத்தின் ஏழை மற்றும் ஆதரவற்ற பிரிவினரைப் பாதுகாப்பது.

2) ஊழலைக் கட்டுப்படுத்துவது.

3) அரசாங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் குறித்து தொடர்ந்தும் பொதுமக்கள் கருத்துக்களை கேட்டறிவது. ஆகிய மூன்று விடயங்கள் ஆகும். இந்த மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற நாம் நடவடிக்கை எடுக்கின்றோம்.

இங்கு, சமூகத்தில் மிகவும் ஆதரவற்ற மற்றும் ஏழ்மையான பிரிவினருக்கு முறையான சமூகப் பாதுகாப்பு உள்ளதா என்பதைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தேவையான ஆதரவையும் நிவாரணத்தையும் வழங்க நடவடிக்கை எடுப்போம்.

ஒழுங்குபடுத்தல், கொள்முதல் மற்றும் அரசியல் ஆகிய அனைத்து அம்சங்களிலும் ஊழலை முற்றிலுமாக நிறுத்துவதற்கும், டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் பொறுப்புணர்வை அடிப்படையாகக் கொண்ட அரசாங்க பொறிமுறையின் மூலம் ஊழலுக்கு எதிரான நடைமுறைகளை செயல்படுத்துவதற்கும் ஒரு விசேட செயலணி நிறுவப்படும்.

### நான்காவது தூண் - அரச தொழில்முயற்சிமறுசீரமைப்பு

தற்போது, பொருளாதாரத்தின் 33 துறைகளில், 430 அரச நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 06 சதவீதமான இலங்கையர்கள் பணிபுரிகின்றனர்.

அரச துறைக்கு சந்தையின் ஏகபோக உரிமை வழங்குவதன் விளைவு, தனியார் முதலீடுகள் வீழ்ச்சியடைவதுதான். விலை நிர்ணயம், திறமையற்ற முகாமைத்துவம் மற்றும் மோசமான நிதிச் செயல்பாடுகள் காரணமாக, இந்த தொழில்முயற்சியாளர்கள் தொடர்ந்து நட்டத்தை சந்தித்து வருகின்றனர். இந்த நிறுவனங்கள் அரசாங்கத்தின் வரிப்பணத்தை நம்பி பிச்சை எடுக்கும் நிறுவனங்களாக மாறிவிட்டன.

2021 ஆம் ஆண்டில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை மற்றும் ஸ்ரீலங்கன் எயார் லைன் ஆகியவற்றின் செயற்பாட்டு இயக்கத்தினால் ஏற்பட்ட இழப்பு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.6 சதவீதமாகும். இந்தக் கடன் சுமையை இருபத்தி இரண்டு மில்லியன் மக்கள் மீது சுமத்துவது நியாயமற்றது.

இந்தத் தோல்வியடைந்த நிறுவனங்களை நிர்வகிக்க பெருமளவிலான மக்களின் வரிப்பணத்தைப் பயன்படுத்த (03ஆம் பக்கம் பார்க்க)

## 2048இல் ....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி) வேண்டியுள்ளது. இந்த நிறுவனங்கள் அரசாங்கத்துக்கும் சுமையாக உள்ளன. நாட்டுக்கு சுமை. மக்களுக்கு சுமை. எனவே, இவற்றை வெற்றியடையச் செய்வதற்குத் தேவையான சீர்திருத்தங்களையும் மறுசீரமைப்புகளையும் நாம் செய்ய வேண்டும்.

அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் திட்டத்தை நாம் ஏற்கனவே தயாரிக்கத் தொடங்கியுள்ளோம். இந்தத் திட்டத்தின் மூலம் இந்த நிறுவனங்கள் வெற்றிபெறமுடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.

மேலும், அரச நிறுவனங்களின் தலைமை அதிகாரிகள் தங்கள் செயல்திறனை மேம்படுத்த தங்களை அர்ப்பணிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அவர்களுக்கு வழங்கப்பட்ட வருடாந்த இலக்குகளை அவர்கள் பூர்த்தி செய்யத் தவறினால், அவர்களுக்குப் பதிலாக பொருத்தமானவர்களிடம் அந்தப் பொறுப்புகளை ஒப்படைப்பதற்கும் நாங்கள் தயங்குவதில்லை.

பொதுமக்கள் பங்களிப்பு கூட்டாய்வு நடவடிக்கைகளுக்கும் மக்களின் பங்களிப்பைப் பெறவும் நாங்கள் செயற்பட்டு வருகிறோம். 06 வாரங்களாக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள், பகுப்பாய்வு மற்றும் முடிவுகளின் அடிப்படையில், பல்வேறு வேலைத்திட்டங்கள் குறித்து தயாரிக்கப்பட்ட திட்டங்கள், பொதுமக்கள் சந்திப்பு தினத்தில் அறிவிக்கப்படும்.

அந்த திட்டங்கள் அனைத்தும் மக்களிடம் முன்வைக்கப்படும். அதன் மூலம் மக்கள் தங்கள் கருத்துக்களையும் பதில்களையும் தெரிவிக்க வாய்ப்பு அளிக்கப்படும். கூட்டாய்வு செயல்முறை மூலம் தயாரிக்கப்பட்ட திட்டங்கள் மக்களின் ஆலோசனைகளினால் மேலும் செம்மைப்படுத்திய பின்னர் அமுல்படுத்தப்படும்.

அதேபோன்று, நமது சீர்திருத்தம் மற்றும் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் குறித்த அனைத்து தகவல்களையும் மக்களுக்கு வழங்க நான் நடவடிக்கை எடுப்பேன். ஜனாதிபதியின் வருடாந்த அறிக்கையாக இந்தப் பணியைச் செய்ய வேண்டும் என்று நான் பரிந்துரைக்கிறேன்.

நமது கொள்கைத் திட்டத்தை செயல்படுத்தும்போது, சமூகத்தில் உள்ள அனைத்து தரப்பினரின் கருத்துக்களையும் பெற்றுக்கொள்வது முக்கியம் என்பதே எமது நிலைப்பாடாகும். கூட்டாய்வு செயல்முறையிலும், பொது மக்கள் தினத்திலும் இதே செயல்முறையையே நாங்கள் முன்னெடுக்கின்றோம்.

இந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டு முடிவதற்குள் கூட்டாய்வு செயல்முறையை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம். மூன்றாவது காலாண்டில், இணைப்புச் செயல்முறை மற்றும் தற்போது பொருளாதாரம் தொடர்பான விசேட செயலணிகளின் செயற்பாடுகள் திறந்த மற்றும் வெளிப்படையாக பொதுமக்களுக்கு முன்வைக்கப்படும்

இவை அனைத்துக்கும் பிறகு, இந்த ஆண்டின் இறுதிக் காலாண்டில் தேசிய மறுசீரமைப்புத் திட்டத்தை வெளியிட நாம் எதிர்பார்த்துள்ளோம்.

செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் நடைமுறைகளின் முன்னேற்றத்தை டிஜிட்டல் ஊடகம் மூலம் காண்பதற்கான வாய்ப்புகள் மக்களுக்கு வழங்கப்படும். நடைமுறைப்படுத்தும்போது ஏற்படும் சிக்கல்கள் மற்றும் தடைகளை எடுத்துக்காட்டும் வழிமுறையும் இதில் அடங்கும். அதன்படி, தடைகள் மற்றும் சிக்கல்களைக் கண்டறிவதற்கும் அவற்றை துரிதமாக தீர்க்கும் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

இத்திட்டங்களை அமுல்படுத்துவதை ஒருங்கிணைக்கும் வகையில் அரச மற்றும் தனியார் துறை உயர் அதிகாரிகளைக் கொண்ட ஜனாதிபதி விசாரணைப் பணியகம் ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. துறைசார் அமைச்சுகளுடனான ஒருங்கிணைப்புப் பணிகள் அவர்களினால் முன்னெடுக்கப்படும்.

எதிர்காலத்தை உருவாக்குதல்

இந்தச் சீர்திருத்தங்கள் ஒட்டுமொத்த மக்களுக்கும் ஒரு சேர பயன் தரும் திட்டமாகும். இந்தத் திட்டத்தின் மூலம் நீங்கள் உட்பட முழு நாடும் முன்னேற்றம் அடையும். உங்களினதும் முழு நாட்டு மக்களினதும் வாழ்க்கைத் தரம் இதன் மூலம் உயர்வடையும்.

இது சமூகத்தின் ஒரு பிரிவினரை மட்டும் இலக்காகக் கொண்ட திட்டம் அல்ல. இது நாடு தழுவிய திட்டம் ஆகும். அப்போதுதான், இளைஞர்களின் வளப் பயன்பாட்டின் மூலம், இலங்கையின் ஏற்றுமதிக்காக சர்வதேச போட்டித்தன்மையை அதிகரிக்கவும், மனித மூலதன வளர்ச்சியின் அடித்தளத்தை விரிவுபடுத்தவும் வாய்ப்புகளை உருவாக்கவும் முடியும்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் நாம் பொருளாதாரத்தை முழுமையாக ஸ்திரப்படுத்துவோம். அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளில் உயர் வருமானம் ஈட்டும் அபிவிருத்தி அடைந்த நாடாக மாறும். அதுவே எங்களின் நோக்கமாகும். முதல் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, நாட்டைக் கட்டியெழுப்பும் பணி அடுத்த தலைமுறைக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.

அதற்காக நாம் இளைஞர்களை தயார்படுத்தி வருகிறோம். சீரமைக்கிறோம். அதாவது, சவால்களை எதிர்கொண்டு, 2048 ஆம் ஆண்டளவில் எமது தாய் நாட்டை முழுமையான அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதற்கு இளைஞர்கள் தோள் கொடுப்பார்கள் என்றும், நாட்டிற்கான இந்தப் பொறுப்பையேற்று அந்த இலக்கை அடைவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இது, எங்கள் அனைவரின் எதிர்காலத்தையும் கட்டியெழுப்பும் ஒரு வேலைத் திட்டம் ஆகும். நமது எதிர்கால சந்ததியினரின் எதிர்காலத்தை மேம்படுத்தும் திட்டமாகும். எனவே, இந்தப் பணிகளின் வெற்றிக்கு நீங்கள் அனைவரும் பங்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

2048 அபிவிருத்தி அடைந்த ஒரு நாடு. அதுவே எங்களின் இலக்கு. இந்த இலக்கை அடைவதே எங்கள் போராட்டம். நாம் ஒன்றாக நமது எதிர்காலத்தை உருவாக்குவோம். சிறந்த தொரு எதிர்காலத்தை உருவாக்குவோம் - என்றார்.

## 13, 14 சத .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பெறுமதி படிப்படியாக உறுதியடைந்துவருகிறது. சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலகவங்கி போன்ற சர்வதேச நிதியியல் கட்டமைப்புக்களின் உதவிகள் மூலம் வெகுவிரைவில் வெளிநாட்டுக்கையிருப்பு உறுதியடையும் என்ற நம்பிக்கை உள்ளது.

நாணயச்சபையின் வட்டிவீதக்குறைப்புத் தீர்மானத்துக்கு அமைவாக வட்டிவீதங்களைக் குறைத்து அதன் நன்மையை மக்களுக்குப் பெற்றுத்தரவேண்டும் என்று வணிகவங்கிகளிடம் வேண்டுகோள்விடுகின்றோம்.

நாம் எதிர்பார்த்ததை விடவும் மிகவேகமாகப் பணவீக்கம் வீழ்ச்சியடைந்து செல்கின்றது. அதன்படி இவ்வாண்டின் பின்னரைப் பகுதியில் நாணயக்கொள்கையைத் தளர்த்துவதற்கும், பொருளாதார மீட்சியை அடைந்துகொள்வதை முன்னிறுத்திய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் எதிர்பார்த்துள்ளோம்.

குறிப்பாக, கடுமையான நிதிக் கொள்கை காரணமாக, செப்டம்பர் மாதம் 70 சதவீதமாக அதிகரிக்கவிருந்த பணவீக்க அதிகரிப்பை தடுக்க முடிந்தது.

தற்போது மிகவும் வேகமாக பணவீக்கம் குறைவடைந்து வருவகிறது. பணவீக்கம் குறைந்ததால், அதிகரித்த வட்டி வீதத்தை ஓரளவு குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

ஜனவரி மாதம் திறைசேரி முறிகளின் மூன்று மாத வட்டி வீதம் 33 வீதமாகக் காணப்பட்டது. பணவீக்கம் மிக வேகமாகக் குறைந்து ஜூலை மாத இறுதியில் ஒற்றை இலக்கத்திற்கு வரும் என்ற நம்பிக்கையும் உள்ளது.

பொருளாதார நிலவரம் குறித்து சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள முதலாவது மீளாய்வின்போது மதிப்பீடுகளை மேற்கொள்வர். இச் செயற்றிட்டம் 4 வருடகாலத்துக்குரியதாக இருந்தாலும் கூட, இம்மீளாய்வின்போது ஏற்கனவே இணக்கம் காணப்பட்ட நிபந்தனைகள், அவற்றின் அமுலாக்கம் மற்றும் முன்னேற்றம் என்பன தொடர்பில் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுகிறது. அத்துடன் இணக்கம் காணப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைக்கப்படவுள்ளது என்றார்.

## மதக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நல்லிணக்கத்திற்கு குரோதமாகவே அமையும். எனவே தொல்லியல் திணைக்களம் இவ்வாறான விடயங்களை கைவிடுதல் வேண்டும். தற்போதுள்ள சம நிலையை பேணி பாதுகாக்க வேண்டும் என தெரிவித்தார்.

யாழ் மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை பி. ஜெபரட்ணம் தெரிவித்ததாவது:

மத நல்லிணக்கத்திற்கு எமது நாட்டில் முன் எப்போதும் இல்லாதவாறு பெரும் சவால்கள் ஏற்பட்டுள்ள காலகட்டத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

மற்ற மதங்களை மதிக்காத அன்பு செய்யாத ஏற்றுக்கொள்ளதா தன்மை எமது நாட்டில் தலைவிரித்தாடுகின்ற நிலை இருப்பது போல் தோன்றுகின்றது.

இதனால் பல்வேறு இடங்களில் பல்வேறு பிரச்சனைகளால் மதங்களுக்கிடையில் பிரிவினை ஏற்பட வாய்ப்பு ஏற்படுகின்றது. இந்த நேரத்தில் நாம் எங்கள் மதத்தை எவ்வாறு மதிக்கின்றோமோ அதேபோல் ஏனைய மதங்களையும் மதிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். அத்துடன் எமது நாட்டில் பல இன மக்கள் ஒன்றாக வாழ்கின்றோம்.

இருந்தபோதிலும் மக்களிடையே வேற்றுமைகளை ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் திணிக்கப்படுகின்றன. அதாவது ஒரு இனம் வாழும் இடத்தில் அந்த இனத்திற்குத் தேவையில்லாத அந்த இனத்திற்கு ஒவ்வாத மற்றோர் இனத்திற்குத் தேவையான ஒரு விடயத்தினைச் செய்கின்றபோது மக்களுக்கிடையில் பிரிவினை ஏற்பட காரணமாகி விடுகின்றது. ஆகவே ஒவ்வாரு இனத்தவரும் வசிக்கும் இடங்கள் மதிக்கப்படவேண்டும்.

அவர்களுடைய கலாசார சமய விழுமிங்கள் மதிக்கப்பட்டு செயற்பாடுகள் இடம் பெறம்போது இவ்வாறான பிரிவினைகள் ஏற்படுவதனை தவிர்க்க முடியும் என தெரிவித்தார்.

இவ் ஊடக சந்திப்பில் பௌத்த, கிறிஸ்தவ, சைவ, இஸ்லாமிய மதகுருமார் கலந்துகொண்டிருந்தனர். (100)

## இஸ்லாத்தை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மதத்தையும் நம்பவும் பின்பற்றவும் நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமை உண்டு. பௌத்தத்தின் உண்மையான போதனையே அன்பும், மரியாதையும், பொறுமையும், மற்றையவர்களின் நம்பிக்கைக்கு மதிப்பளிப்பதும்தான்'' என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், குருநாகல் வைத்திய நிபுணரான ஷாபி ஷிகாப்தீன் குற்றமற்றவர் என்று விடுவிக்கப்பட்டு மீண்டும் குருநாகல் வைத்தியசாலையிலேயே கடமைகளைப் பொறுப்பேற்றுள்ள நிலையில், அவரை இந்த நிலைக்கு ஆளாக்கிய குற்றவாளிகளான - இனவாதிகளைத் தண்டிக்கவேண்டும் என்றும் சந்திரிக்கா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.

''மருத்துவர் ஷாபி தொடர்பில் நாடு முழுவதும் பொய்களைப் பரப்பி, அந்த நல்ல மனிதரின் வாழ்க்கையை அழித்தவர்களுக்க என்ன தண்டனை? இப்போதும் தாமதமாகிவிடவில்லை, அந்தக் குற்றவாளிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தண்டிக்கவேண்டும். அதுதான் ஜனநாயக ஆட்சியாக இருக்கமுடியும்" - என்று தெரிவித்துள்ளார் அவர்.










காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆபத்தை உணர்ந்து செயலாற்றுவோம்

எதிர்காலம் குறித்த ஆபத்தான சமிக்ஞையை வெளிப்படுத்தும் தகவலை அதிகாரிகள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் பாடசாலையைவிட்டு மாணவர்கள் இடை விலகும் எண்ணிக்கை திடீரென உச்சமடைந்துள்ளது என்பதே அவர்களின் தகவல். கொரோனா பெருந் தொற்றுக் காலத்தில் இருந்தே இந்த அதிகரிப்பு உணரப்பட்டு வந்திருக்கின்றது என்றாலும் இப்போது அது அபாயகரமான கட்டத்தை எட்டியுள்ளதாகத் தெரிகின்றது.

யாழ். மாவட்டத்தில் கடந்த ஆண்டு பாடசாலைகளைவிட்டு 355 மாணவர்கள் இடைவிலகியிருந்தனர். ஆனால் இந்த ஆண்டு முதல் 4 மாதங்களில் மட்டும் 200 பேர் இடை விலகியுள்ளனர் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சு தெரிவிக்கின்றது.

மாணவர்கள் இடை விலகளிற்கு நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியே முக்கிய காரணியெனவும் சுட்டிக் காட்டப்படுகின்றது. இடை விலகும் மாணவர்கள் தொழிலிற்குச் செல்கின்றனர் என்பதும் அதிகாரிகள் தரப்பிலிருந்து சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதிக மாணவர்கள் இடைவிலகும. கல்வி வலயமாக வலிகாமம் இனம் காணப்பட்டுள்ளது. கடந்த ஆண்டும் 170 மாணவர்ககள் இந்தப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் இருந்து இடைவிலகியுள்ளனர். இந்த ஆண்டு இதுவரையில் 137 மாணவர்கள் இடை விலகிவிட்டனர்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போன்று யாழ்ப்பாணத்தின் இந்தப் புள்ளி விவரங்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களின் ஏனைய பகுதிகளின் நிலைமையை உணர்த்துவதற்கும் போதுமானது. ஏனெனில் ஒப்பீட்டளவில் வடக்கு கிழக்கில் உள்ள வேறு பல மாவட்டங்கள் யாழ்ப்பாணத்திலும் பார்க்க பொருளாதார மட்டத்தில் கீழ் நிலையில் இருக்கின்றன. எனவே அங்கும் கணிசமான இடைவிலகல்கள் நிகழும் என்பதை ஊகித்தறிவது சிரமமல்ல.

இன்னும் குறிப்பாக, மலையகப் பகுதிகளிலும் இந்த நிலை இன்னும் தீவிரமடைந்திருக்க வாய்ப்புகள் அதிகம் உள்ளன. தோட்டத் தொழிலாளர்கள் இந்தப் பொருளாதார நெருக்கடியால் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியிருக்கும் நிலையில் அங்கும் இடைவிலகல்களின் வீதம் அதிகரித்திருக்கும் என்பதை ஏற்றேயாக வேண்டியிருக்கும்.

இந்த நிலையை மாற்ற அரசு தனிப்பட எந்த முயற்சியையும் எடுக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு உதவுவது என்கிற பொதுக்கொள்கையின் அடிப்படையிலேயே ஆட்சியாளர்கள் இந்தப் பிரச்சினையை அணுக முற்படுவர். அப்படி அரசினால் கொடுக்கப்படும் உதவிகள் – அவை பண உதவியாக இருந்தாலும் – மானியங்கள் மட்டும் இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலைகளுக்குக் கொண்டு வருவதற்குப் போதுமானதல்ல.

போர்க் காலங்களிலும் வடக்கு கிழக்கில் இத்தகைய பிரச்சினை எதிர்கொள்ளப்பட்டு வந்துள்ளது. அப்போது பல தொண்டு நிறுவனங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் அதில் அக்கறையோடு செயற்பட்டு இடைவிலகும் மாணவர்களை மீண்டும் பாடசாலைகளுக்குத் திருப்புவதில் தனிக் கவனம் செலுத்தியிருந்தன. மாணவர்களை மட்டுமன்றி மாணவர்கள் பாடசாலைக்குத் திரும்புவதற்கான குடும்பச் சூழலை மாற்றுவது தொடர்பிலும் அந்த அக்கறை வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

அரசின் பொதுக் கொள்கை ஒன்றின் ஊடாக மட்டும் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது. ஏனெனில் ஒவ்வொரு குடும்பத்தின் பிரச்சினைகளும் தனித்துவமானவையாக இருக்கும். அவற்றின் பொருளாதார, சமூக, உளவியல் நிலைகள் மாறுபட்டதாக இருக்கும். எனவே அவற்றை அணுகிக் முறையாகவும் பொறுமையாகவும் கையாள்வதன் மூலமே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

கல்விதான் எங்கள் சொத்து. கல்விதான் எங்கள் எதிர்காலம். கல்விதான் தமிழர்களின் மூலதனம் என்கிற வகையில் அனைத்துத் தரப்புக்களும் இந்த விடயத்தில் அதிக அக்கறை எடுத்து ஒரு தீர்வைக் காண உழைக்கவேண்டும். குறிப்பாகப் புலம்பெயர் தேசங்களில் உள்ள, ஆலயங்கள், அறக்கட்டளைகள், தொண்டு நிறுவனங்கள், அமைப்புக்கள் இதுவிடயத்தில் கூடுதல் அக்கறைகொள்ளவேண்டும். அது காலத்தின் கட்டயாம்.

கல்வியை இழந்தால் சமுகத்தை இழப்போம். அடிமைப் படுவோம். அதையுமுணர்ந்து செயலாற்றுவோம்.

# ஊடகங்களை ஒடுக்குகின்ற அரசின் நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும்

## மனோ கணேசன் ஆக்ரோஷம்



ஊடகங்களை ஒடுக்குவதற்காக அரசாங்கம் எடுக்கவுள்ள சில முயற்சிகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில் -

அரசாங்கம் தற்போது ஒலிபரப்புத் தொடர்பான சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவருவதற்குமுயற்சிசெய்கின்றது.

குறித்த அரசாங்கத்தின் முயற்சியில் குறித்த ஆணைக்குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் எந்த வேளையும் ஓர் ஊடக நிறுவனத்திற்குள் சென்று விசாரணைகளை நடத்தலாம்.

இந்த விடயம் ஊடக சுதந்திரத்தை வெகுவாகப் பாதிக்கும் என்பதே எமது குற்றச்சாட்டு.

அரசாங்கம் ஏன் தற்போது அவசர அவசரமாக இந்த ஒலிபரப்புத் தொடர்பான சட்டமூலத்தைக் கொண்டு வருகின்றது என்ற கேள்வி எம் மத்தியில் எழுகின்றது.

அரசாங்கம் முன்னர் கொண்டுவருவதற்கு எத்தனித்த புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மற்றும் ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்களை அரசாங்கம் சந்தித்துள்ளது.

இதற்கு ஊடகங்களும் ஒரு காரணமாக இருந்துள்ளன. எனவே முதலில் ஊடகங்களை அடக்க வேண்டும் என்பதற்காக அரசாங்கம் தற்போது இந்த சட்டமூலத்தைக் கொண்டு வருவதற்கு எத்தனிக்கின்றது.

இது தவறான விடயமாகும். இதற்கு எதிர்க்கட்சி மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் நாம் எமது எதிர்ப்பை வெளியிடுகின்றோம்.

எனவே தற்போது ஊடகங்களை முதலில் அடக்கிவிட்டு பின்னர் தமக்கு ஏற்ற விதத்தில் சட்டமூலங்களைக் கொண்டு வரலாம் என அரசாங்கம் நினைக்கின்றது. அவ்வாறு செய்யக்கூடாது. இது தவறான விடயமாகும். முதலில் பொருளாதார முன்னேற்றத்தில் கவனம் செலுத்துங்கள் என்றே நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

எனவே புதிய சட்டமூலங்களைக் கொண்டுவருகின்றமை போன்ற செயற்பாடுகளை மக்களாணை பெற்ற அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் முன்னெடுக்கலாம் என அரசாங்கம் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

அதற்கு நிச்சயமாக நாம் ஆதரவு வழங்குவோம் - என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# ஊடக சுதந்திரத்தை கட்டுப்படுத்தமாட்டோம்

## சஞ்சீவ எதிரிமான கூறுகிறார்



ஊடக சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த ஒருபோதும் நடவடிக்கை எடுக்கப் போவதில்லை என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்த அவர் -

மக்களுக்கான தகவலறியும் சட்டத்தை இல்லாது செய்யும் வகையில், ஊடக சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த நாம் ஒருபோதும் நடவடிக்கை எடுக்கப் போவதில்லை.

ஊடக சுதந்திரத்தைப் பாதுகாக்க நாடாளுமன்றுக்கு உள்ளேயும் வெளியேயும் நாம் நிச்சயமாக குரல் கொடுப்போம்.

சட்டமூலம் தொடர்பாக பெரிதாக விவாதிக்கத் தேவையில்லை. ஏனெனில், இது தொடர்பாக நீதிமன்றுக்குச் செல்லலாம்.

நாம் முதலில் இது தொடர்பாக ஆராய வேண்டும். அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடவும் நாம் தயாரா கவே உள்ளோம்.

மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் உள்நாட்டு ஊடகங்களுக்கு மட்டுமன்றி, சர்வதேச ஊடகங்களுக்கும் நாட்டில் பூரண சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது.

டிஜிற்றல் ஊடகத்தின் பலம் சமூகத்தில் அதிகரித்துள்ளது. மக்களும் இவற்றை அவதானித்துக்கொண்டுதான் இருக்கி றார்கள்.

பிரபலமான தீர்மானங்கள் இல்லாவிட்டாலும், நாட்டின் நன்மைக்கான சில தீர்மானங்களை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் அரசாங்கம் உள்ளது.

இந்த சட்டம் கொண்டு வரப்படுவதால் ஊடகவியலாளர்கள் சிறைக்குச் செல்வார்கள் என்று அர்த்தம் கிடையாது என நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான தெரிவித்துள்ளார். (05)

# ஊடக சுதந்திரத்தை ஒழிப்பதே ஆட்சியாளர்களின் முயற்சி

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் காட்டம்

ஜனநாயகத்தின் நான் காவது தூணாகக் கருதப்படும் ஊடகத்துறையைக் கட்டுப்படுத்தி, ஊடக சுதந்திரத்தை இல்லாது செய்யவே அரசாங்கம் முயற்சிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

எதிர்க்கிட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொர்டர்பாக கருத்துத் தெரிவித்த அவர் -

அரசாங்கம் ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது.

அந்தவகையில், ஒளிபரப்பு ஒழுங்குப்படுத்தல் சட்டமூலத்தைக் கொண்டுவர தற்போது நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதன் ஊடாக ஜனநாயகத்தின் நான்காவது தூணாகக் கருதப்படும் ஊடகத் துறையைக் கட்டுப்படுத்தி, ஊடக சுதந்திரத்தை இல்லாது செய்யவே அரசாங்கம் முயல்கின்றது.

இந்த சட்டம் நடைமுறைக்கு வந்தால் 6 மாதங்களுக்கு மட்டுமே அலைவரிசைக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

வருடாந்திர அனுமதிப்பத்திரம் பெற வேண்டுமெனில், குறித்த அலைவரிசை அரசாங்கத்திற்கு சார்பானதா அல்லது மத்தியஸ்தமாக செயற்படுகிறதா என்பது ஆராயப்படும். இதனால் தனியார் தொலைக்காட்சி அலை வரிசைகள் கடுமையாகப் பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அரச அனுசரணையுடன் அரசாங்கத்துக்கு சார்பான செய்திகளை மட்டும் மக்களுக்கு வழங்க வேண்டும் என்றே அரசாங்கம் இந்த சட்டத்தைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்க்கட்சிகள் அனைவரும் இதற்கெதிராக ஒன்றிணைந்து, அரசாங்கத்தின் இந்த ஜனநாயக விரோத செயற்பாட்டைத் தோற்கடிக்க வேண்டும்.

விரைவிலேயே நாம் இந்த ஏகாதிபத்திய நடவடிக்கையை நீதிமன்றின் ஊடாகத் தோற்கடிப்போம்.

நாடாளுமன்றுக்கு உள் ளேயும் வெளியேயும் இதற் கான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்வோம். - என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# ஊடகத்துறைக்கு சில சட்டங்களை ஏற்படுத்தவேண்டியது அவசியமாம்

## வஜிர அபேவர்தன விடாப்பிடி



ஊடகத்துறையில் சில மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமாயின் சில சட்டங்களை கொண்டுவர வேண்டியது அவசியம் என நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசியக்கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

ரூபவாஹினி அலைவரிசையை 1978 இற்குப் பின்னர் நாட்டில் அறிமுகப்படுத்தியபோது, இது தேச விரோதமான செயற்பாடாகும் என பலரும் எதிர்ப்பை வெளியிட்டார்கள்.

இதனால் சமூகம் சீரழியும் என்றும் தெரிவித்தார்கள். ஆனால், அதனைக் கருத்திற் கொள்ளாமல்தான் ஜே.ஆர். ஜயவர்த்தன அலைவரிசையை ஆரம்பித்தார்.

அன்று எதிர்ப்பை வெளியிட்டவர்களின் பிள்ளைகள், இன்று தொலைக்காட்சிகளின் பிரதானிகளாகப் பணியாற்றி வருகின்றனர்.

சிங்கப்பூர், மலேசியா, சீனா மற்றும் ஐரோப்பா நாடுகளில் காணப்படும் ஒளிபரப்பு ஒழுங்குச் சட்டம் தொடர்பாக எதிர்க்கட்சிகள் முதலில் தெளிவடைய வேண்டும்.

சிங்கப்பூரில் பத்திரிகைச் செய்திகளை காலையில் வாசிக்கலாம். ஆனால், பத்திரிகையில் உள்ளதைத் தவிர வேறு ஏதேனும் கருத்துக்களை குறித்த தொகுப்பாளர் கூறினால் 100 சிங்கப்பூர் டொலரளவில் அபராதம் விதிக்கப்படும்.

ஊடக நிறுவனங்களுக்கு கருத்துச் சுதந்திரம் உள்ளது. அதேநேரம், வெறுப்புப் பேச்சுக்களை வெளிப்படுத்தவும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையை சிங்கப்பூராக மாற்ற வேண்டும் என்றும் சீனாவை போன்று மாற்ற வேண்டும் என்றும் ஐரோப்பா போல மாற்ற வேண்டும் என்று பலரும் கூறுகிறார்கள்.

அப்படியானால், சில சட்டங்களை நாம் கொண்டுவரத்தான் வேண்டியுள்ளது.

இது தொடர்பாக நாம் மக்களுக்கு மெதுவாக தெரியப்படுத்துவோம் என நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# வெளிநாடுகளில் நிர்க்கதியான பெண்களை பாதுகாக்ககோரி வவுனியாவில் போராட்டம்



வெளிநாடுகளில் நிர்க்கதியான பெண்களைப் பாதுகாக்குமாறு கோரி வவுனியாவில் நேற்று (வியாழக்கிழமை) கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வெளிநாடுகளுக்குவாழ்வாதாரத்தை தேடிச் சென்று நிர்க்கதியான பெண்களுக்கு பாதுகாப்பைக் கோரி வவுனியாவில் கவனவீர்ப்பு போராட்டம் நேற்று இடம்பெற்றது.

வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டு ஏற்பாடு செய்திருந்த குறித்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் வவுனியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பெண்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது மத்திய கிழக்கு நாடுகளில் தொழிலுக்காக சென்று நிர்க் கதியான பெண்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்கின்றனர் எனப் போராட்டக்காரர்களால் தெரிவிக்கப்பட்டது.

மேலும், போலி முகவர்கள் தொடர்பாகவும் அரசாங்கம் உரிய கவனமெடுக்க வேண்டும் எனவும் இவர்களால் வலியுறுத்தப்பட்டது. (05)

# கல்வி, சுற்றுலாத்துறை, சுகாதாரம், காணி விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்துக

## முஷாரப் எம்.பி ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் வேண்டுகோள்



(அபு அலா)

கிழக்கு மாகாணத்தில் கல்வி, சுற்றுலாத்துறை, சுகாதாரம், காணி அபிவிருத்தி போன்ற விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்துமாறு, திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களுக்கான அபிவிருத்திக்குழு தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் கேட்டுக்கொண்டார்.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரபிற்கும், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்குமிடையிலான சந்திப்பு திருகோண மலை ஆளுநர் செயலகத்தில் புதன்கிழமை இடம்பெற்றபோது அவர் இவ்வாறு கேட்டுக்கொண்டார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

எமது நாடு மிகவும் இக்கட்டான காலகட்டத்தில் இருந்தபோது ஜனாதிபதிப் பதவியை பொறுப்பேற்றுக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பல சவால்களை எதிர்கொண்டு நாட்டை மீட்டுவரும் ஜனாதிபதியின் வேலைத் திட்டங்களை அம்பாறை மாவட்டத்தில் முன்னெடுத்துச் செல்வதற்கு ஆளுநரின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

சிறுபான்மையினக் கட்சி ஒன்றின் தலைவரான தாங்கள் ஆளுநராக நியமிக்கப்பட்டிருப்பதையிட்டுதாம் மிகுந்த மகிழ்ச்சியடைவதாகவும், கிழக்கு மக்களும் இதனைப் பெரிதும் ஆதரித்துள்ளதாகவும் இதன்போது அவர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக, கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் நீண்டகாலமாக தற்காலிக, பதிலீட்டு அடிப்படையில் பணியாற்றிவரும் ஊழியர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தார்.

இந்தக் கோரிக்கையை நானும் விரும்புகின்றேன். அதற்கான அனுமதி மத்திய அரசாங்கத்தால் கிடைக்கும்போது அதனை விரைவாகச் செய்வேன். இதற்கான அனுமதி கிடைப்பதற்கு நீங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளை நாடாளுமன்ற உறுப்பினரிடம் கிழக்கு மாகாண ஆளுநர் கேட்டுக் கொண்டார்.

ஆளுநர் செந்தில் தொண்டமானுடனான சந்திப்பு திருப்திகரமாக அமைந்ததாகவும், மக்களுக்கான பணியில் மிக வேகமாக செயற்படுவார் என்ற நம்பிக்கை தனக்கு ஏற்பட்டுள்ளதாகவும் முஷாரப் எம்.பி. இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

ஆளுநருடனான இந்தச் சந்திப்பில் பொத்துவில் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்களான எம்.எஸ்.முபாரக், அன்வர் சதாத், நாடாளுமன்ற உறுப்பினரின் ஊடக இணைப்பாளர் எஸ்.எம். அறூஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (05)

# தீகவாபியில் கர்ப்பிணித் தாய்மாருக்கு போஷாக்கு உணவுத் திட்ட ஏற்பாடுகள்

(நூருல் ஹுதா உமர்)



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸின் வழிகாட்டுதலில் சுகாதார சேவைகள் பணிமனையின் எம்.சி.எச். பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரியின் மேற்பார்வையின் கீழ், அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியால் ஒருங்கிணைக்கப்பட்ட தீகவாபி பிரதேச தாய் ஆதரவு குழு தேர்ந்தெடுக்கப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் அவர்களது கணவர்களுக்கான போக்கு உணவுத் திட்டத்தை வெற்றிகரமாக ஏற்பாடு செய்தது.

ஊட்டச்சத்து உணவுத் திட்டத்தின் முதன்மை நோக்கம் கர்ப்பிணித் தாய்மார்கள் ஆரோக்கியமான கர்ப்பம் மற்றும் பிரசவத்துக்குத் தேவையான ஊட்டச்சத்தைப் பெறுவதை உறுதி செய்வதாகும். மொத்தம் 21 கர்ப்பிணித் தாய்மார்கள் தங்கள் குறிப்பிட்ட ஊட்டச்சத்து தேவைகளின் அடிப்படையில் நிகழ்ச்சியில் பங்கேற்க தேர்வு செய்யப்பட்டனர். கர்ப்ப காலத்தில் தங்கள் மனைவிகளை ஆதரிப்பதில் அவர்கள் வகிக்கும் முக்கிய பங்கை அங்கீகரித்து, அவர்களின் கணவர்களும் பங்கேற்க அழைக்கப்பட்டனர்.

நிகழ்ச்சியில், கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் அவர்களது கணவர்களுக்கு சத்தான உணவுகள் வழங்கப்பட்டன. அத்தியாவசிய விட்டமின்கள், தாதுக்கள் மற்றும் புரதங்கள் உட்பட கர்ப்பிணிப் பெண்களின் உணவுத்தேவைகளைப் பூர்த்தி செய்ய உணவுப் பொருள்கள் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. மேலும், பிரசவத்துக்குத் தேவையான கருவிகள் மற்றும் பொருள்களும் பங்கேற்ற தாய்மார்களுக்கு பரிசாக வழங்கப்பட்டன.

இந்த முன்முயற்சி ஆரோக்கியமான கர்ப்பத்தை ஊக்குவிப்பதும், பிரசவத்தின் போது ஏற்படும் சிக்கல்களின் அபாயத்தைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சரியான ஊட்டச்சத்து மற்றும் தேவையான கருவிகள் கிடைப்பதை உறுதி செய்வதன் மூலம், தீகவாபி பிரிவில் தாய் மற்றும் குழந்தை சுகாதார விளைவுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. (05)

# கற்றல் உபகரணங்கள் மூதூரில் வழங்கிவைப்பு

(ஹஸ்பர்)



திருகோணமலை மூதூர் பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சின்னக் குளம் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்று (வியாழக்கிழமை) பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றதுடன் இதனை திருகோணமலை மாவட்ட செயலக பிரதம கணக்காளர் பரமேஸ்வரனின் கோரிக்கைக்கு அமைவாக உலக சுகாதார ஸ்தாபனத்தில் கடமையாற்றும் குணாளன் என்பவரின் முயற்சியின் பயனாக மறைந்த சுரேஸ் குமாரின் நினைவாக கந்தையா தொண்டு நிறுவனத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. சுமார் 75 மாணவ மாணவிகளுக்காக இது வழங்கப்பட்டன.

மாணவர்களின் கற்றல் திறனை அதிகரிக்கவும் வறுமை நிலை கல்விக்கு தடை இல்லை என்பதை வைத்து கற்றல் உபகரணங்களின் பிரதிபலனாக எதிர்பார்க்கப்படுகிறது.

குறித்த நிகழ்வில் மாவட்ட செயலக சமூக சேவைத் திணைக்கள இணைப்பாளர் த.பிரணவன், மூதூர் பிரதேச செயலக சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் சில்மியா உட்படப் பலர் கலந்துகொண்டனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கில் ஊழல் மோசடிகளுக்கு ஆளுநர் இடமளிக்கக் கூடாது

## இரா.சாணக்கியன் வலியுறுத்து

ஊழல் மோசடிகளற்ற அபிவிருத்தி நடவடிக்கைகளை புதிய ஆளுநர் தனது தலைமையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

முதலில் புதிய ஆளுநருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் அனைத்துமே பல சர்ச்சைகளுக்கு மத்தியிலேயே இடம்பெற்றன.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில்கடந்தஆளுநரின்செயற்பாடுகள் மிகவும்மோசமானவையாகவேகாணப்பட்டன.

அதனடிப்படையில் அனைத்து கூட்டங்களுமே சர்ச்சைக்குரியவைகளாகக் காணப்பட்டன.

அந்தக் காலத்தில் பல ஊழல் மோசடிகளும் இடம்பெற்றிருந்தன. அதற்குச்



சில அரசியல்வாதிகளும் உடந்தையாக இருந்தனர். சில அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் எடுக்காத தீர்மானங்களை எடுத்த தீர்மானங்களாக அறிவிக்கப்பட்ட நிலைமைகளும் காணப்பட்டன.

மக்களுடைய தேவைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படாமல் தங்களது சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சிலரின் நடவடிக்கைகள் அமைந்திருந்தன.

பல கூட்டங்களில் நாம் எதிர்ப்புக்களைத் தெரிவித்திருந்தோம். அந்த நேரத்தில் எம்மை கூட்டங்களுக்கு சமுகமளிப்பதற்குக் கூட அனுமதிக்காத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

சில சந்தர்ப்பங்களில் சிறிய அபிவிருத்தித் திட்ட நடவடிக்கைகளில் கூட மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரின் தலையீடு அல்லது சிபாரிசுடன் முன்னெடுக்க வேண்டிய நிலைமைகளும் காணப்பட்டன.

இவற்றைத் தட்டிக் கேட்கும் அதிகாரிகள்உள்ளிட்டவர்களுக்குஅச்சுறுத்தல் விடுக்கப்பட்டசந்தர்ப்பங்களும்இருந்தன.

எனினும்தற்போதுபதவியேற்றுள்ள ஆளுநர் இந்த விடயங்களைக் கருத்திற்கொண்டுஊழல்மோசடிகளுக்குஎதிராகச் செயற்பட்டால் அவரது நடவடிக்கைகளுக்கு நாம் ஆதரவளிப்பதற்குத் தயாராக உள்ளோம்.

மேலும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் காணப்படும் அரசியல் தலையீடுகள் மற்றும் ஊழல் மோசடிகள் தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டும்.

எனவே மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பில் ஆளுநருடன் இணைந்து பயணிப்பதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம் என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# காற்றாலை மின்னுற்பத்தி நிலைய அனுமதி கிளிநொச்சியில் மறுப்பு

கிளிநொச்சி கௌதாரி முனை பகுதியில் காற்றாலை மின்னுற்பத்தி நிலையம் அமைப்பதற்கு கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுகூட்டம்நேற்று(வியாழக்கிழமை) அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், அங்கஜன் இராமநாதன், செல்வராசா கஜேந்திரன் மற்றும் திணைக்கள உயர் அதிகாரிகள், பாதுகாப்பு தரப்பினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதன்போது, அதாணி குழுமத்தால் பூநகரி கௌதாரிமுனை பகுதியில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ள காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்திற்கு அபிவிருத்திக் குழுவின் அனுமதிக்காக எடுக்கப்பட்டது. இதன்போது வாதங்களும் இடம்பெற்றன.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் கௌதாரி முனைக்கு செல்லும் பிரதான வீதி தொடர்பாக சர்ச்சை எழுந்தது.

குறித்த வீதியை காபெட் வீதியாக அமைப்பது தொடர்பாக எவ்வித உறுதிகளும் வழங்கப்படவில்லை என்றும் அந்தப் பகுதி மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்படக்கூடாது என்றும் கலந்துகொண்டிருந்த மக்கள் பிரதிநிதிகள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

இந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பாக முறையான நடைமுறைளைப் பின்பற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும், அதன் தொடர்ச்சியாகவே குறித்த திட்டத்திற்கு அனுமதி வழங்குவது தொடர்பாகத் தீர்மானிக்க முடியும் எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (05)

# நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிப்பு

நாட்டில் கடந்த வாரங்களுடன் ஒப்பிடுகையில், தினசரி வைத்தியசாலைகளில் சேர்க்கப்படும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வாரத்தில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 800 ஐ தாண்டியுள்ளதாக வைத்தியர் லஹிரு கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த வாரத்தை விட 24 மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் 39028 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்தநிலையில், யாழ்ப்பாணமாவட்டத்தில் டெங்கு நோய் கட்டுப்பாட்டில் உள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து டெங்கு நோயின் தாக்கம் கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் குறைந்தளவில் உள்ளது என்றும் அதேபோல டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் மாவட்டம் முழுவதிலும் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

# பெட்மிண்டன் சங்க உப தலைவர் தெரிவு



(நூருல் ஹூதா உமர்)

கிழக்கு மாகாண விளையாட்டுத் துறையின் முன்னோடி ஆசிரியர் அலியார் பைசர் இலங்கை பெட்மிண்டன் சங்கத்தின் உப தலைவராக 2023/2027 ஆகிய நான்கு ஆண்டு காலப் பகுதிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இலங்கை பெட்மிண்டன் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாக சபை தேர்தலும் விளையாட்டுஅமைச்சின்அதிகாரிகள் மற்றும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய தேர்தல் குழுவின் தலைமையில் இலங்கை பெட்மிண்டன்சங்ககேட்போர் கூடத்தில்நடைபெற்றபோதே இவர் தெரிவுசெய்யப்பட்டார்.

உபதலைவர்பதவிக்காக 16 பேர் கடந்த ஏப்ரல் மாதம் வேட்பு மனு தாக்கல் செய்திருந்தனர். இவர்களில்ஒருவரது வேட்புமனுநிராகரிக்கப்பட்டது. அத்துடன் மூவர் தமது வேட்பு மனுவை வாபஸ் வாங்கிக் கொண்டனர். ஏழுபேர்கள்உப தலைவர்களாகத்தெரிவுசெய்யப்பட வேண்டும் என்பதற்கு இணங்க அலியார் பைசர் அவர்களும் அதில் ஒருவராக அதிகப்படியானவாக்குகளைப் பெற்றுதெரிவுசெய்யப்பட்டார். வடக்கு, கிழக்கை சேர்ந்த ஒருசிறுபான்மை இனத்தவர் இலங்கையின் தேசிய விளையாட்டு சங்கமான இலங்கை பெட்மின்டன் சங்கத்துக்கு உப தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பது இதுவே முதற் தடவையும் வரலாற்று மைக்கல்லாகவும் இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அலியார் பைசர் அவர்கள் கிழக்கு மாகாண பெட்மின்டென் சங்கத்தின் ஸ்தாபகராகவும் பொதுச் செயலாளராகவும் மற்றும் அம்பாறை மாவட்ட பெட்மிண்டன் சங்கத்தின் ஸ்தாபகராகவும் பொதுச் செயலாளராகவும் கடமையாற்றி வருகின்றார். இவர் பெட்மின்டென் துறையில் பல்வேறு தகமைகளையும் செயற்பாட்டு உத்திகளையும் தன்னகத்தேகொண்டுள்ளார்.

இவர் உலக பெட்மின்டென் சம்மேளனத்தின் BWF Level - I பயிற்சியாளராகவும் ஆசிய பெட்மின்டென் சம்மேளனத்தின் BAC Level - II பயிற்சியாளராகவும் இலங்கை பெட்மின்டென் சங்கத்தின் SLBA Level - I பயிற்சியாளராகவும் விளையாட்டு அமைச்சின் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் விசேட வெளிநாட்டு புலமைப்பரிசில்மூலம் மலேசியாவில்பயிற்சியளிக்கப்பட்ட NISS உயர் பயிற்சியாளராகவும் தகைமைகளைபெற்றுள்ளார்.

இவரது வினைத்திறனையும் தகமைகளையும் அறிந்த இலங்கை பேட்மிண்டன் சங்கம் 70 ஆவது பெட்மிண்டன்சாம்பியன்ஷிப் சுற்றுப்போட்டியில் பிரதிப் பணிப்பாளராக நியமனம் செய்து கௌரவப்படுத்தியது. மற்றும்இலங்கை 2032 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் மற்றும் பொதுநலவாய போட்டிகளில் அடைவு மட்டத்தை எவ்வாறு அடைய வேண்டும் என்பதற்கான Strategic Plan ஐ வரைந்து பெட்மின்டென்வளர்ச்சிக்கான திட்டத்தினை சமர்ப்பித்து எல்லோருடைய கௌரவத்தினையும்பெற்றுக்கொண்டார் என்பது இருப்பிடத்தக்க விடயமாகும். அலியார் பைசர் அவர்கள் சர்வதேச ஒலிம்பிக் கவுன்சிலினால் நடத்தப்பட்ட Special Sports Administrator பயிற்சி நெறியில் சித்தியடைந்ததுடன் Athlete 365 மற்றும் Competition Manipulation பாடநெறிகளில் உயர் சித்தியை பெற்றுள்ளார். இவரது தகமைகளையும் தராதரங்களையும் விளையாட்டின் மீது கொண்டுள்ள ஆர்வத்தினையும்கருத்தில் கொண்டு இலங்கை தேசிய ஒலிம்பிக் கவுன்சில் 2022/2026 கல்வி குழு உறுப்பினராக கடந்த வருடம் தெரிவு செய்தது.

பிரதேசம், மாவட்டம், மாகாணம் மட்டுமன்றி தேசிய ரீதியாகவும் விளையாட்டு துறைக்கு பல்வேறு பட்ட சேவைகளையும், உதவிகளையும்வழங்கியுள்ளார். இவரது வழிகாட்டலில் பல்வேறு துறைசார் மாணவர்கள் பட்டதாரிகளாக, உடற்கல்வி ஆசிரியர்களாக, விளையாட்டு உத்தியோகத்தர்களாக, பாடசாலை பயிற்றுவிப்பாளர்களாக, சர்வதேச மற்றும் தேசிய மத்தியஸ்தர்களாக, பயிற்சியாளர்களாக திகழ்கிறார்கள். மத்தியஸ்தர்களாக, பயிற்சியாளர்களாக திகழ்கிறார்கள். (05)

# மக்கள் ஆணை இல்லாத அரசின் செயற்பாடுகளை ஏற்கமாட்டோம்

## எஸ்.எம்.மரிக்கார் திட்டவட்டம்



மக்கள் ஆணை இல்லாத அரசாங்கத்தின் செயற்பாடுகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது என எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கிட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரசாங்கம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளும் இந்த செயற்பாட்டை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

இதேபோன்று ஊடக சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த சந்திரிக்கா குமாரதுங்க அரசாங்கத்தின் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

1997 இல் அதனை நிறைவேற்ற முடியாமல் போனவுடன், அந்த அரசாங்கத்திற்கு எதிரான ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர்.

ஊடகநிறுவனங்கள் அச்சுறுத்தப்பட்டன. அந்த ஊடக நிறுவனங்களை வீழ்த்த வேண்டும் என்று அரசுக்கு சார்பான நிறுவனங்களில் இருந்து வழங்கப்பட்ட விளம்பரங்கள் நிறுத்தப்பட்டன.

மக்கள் ஆணை இல்லாத ஜனாதிபதியும் மக்கள் ஆணை இல்லாத அரசாங்கமும் இணைந்து மக்களுக்கு எதிராக மேற்கொள்ளும் இந்த செயற்பாட்டை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

ஜனநாயகம் தொடர்பாக பேசும் ஜனாதிபதி, ஊடக சுதந்திரத்தை இல்லாமல் செய்யவே இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

ஒட்டுமொத்த உலகத்திலும் ஊடக சுதந்திரம் ஸ்தீரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், ஏன் நாம் மட்டும் பின்னோக்கி பயணிக்க வேண்டும்?

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருந்து, எமக்கெல்லாம் ஜனநாயகத்தைகற்பித்தஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க, மொட்டுக் கட்சியின் வாக்குளால் ஜனாதிபதியான பிறகு இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமை உண்மையில் ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது - என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் மேலும் தெரிவித்தார். (05)

# கிழக்கில் மிகப்பெரும் தகவல் தொழில்நுட்பம் வணிக செயல்முறை மாதிரியாக்க கண்காட்சி

## நம்பிக்கைக்குரிய தொழில்களுக்கான நுழைவாயில்



(நூருல் ஹூதா உமர்)

கிழக்கில் மிகப்பெரும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வணிக செயல்முறை மாதிரியாக்க தொழில் கண்காட்சி 2023, இன்றுகடந்த புதன்கிழமை இலங்கையின் தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஒலுவில் வளாகத்தின் பிரதான கேட்போர் கூடத்தில்வெற்றிகரமாகநடைபெற்றது. பல்கலைக்கழகத்துடன் இணைந்து றீஸிபுறீறீளீநுனி ஆல் நடத்தப்படும் இந்த குறிப்பிடத்தக்க நிகழ்வு, நமது நாட்டில் உள்ள முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் ஆர்வமுள்ள திறமையாளர்களை ஒன்றிணைக்கும் வகையில் மிகப்பெரிய தொழில் கண்காட்சியாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஏ. ரமீஸ் அவர்களின் பிரதம அதிதி உரை யுடனும், SLASSCOM இன் தலைவர் திரு. ஆஷிக் அலி அவர்களின் அறிமுக உரையுடனும் தொழில் கண்காட்சி ஆரம்பமானது. இந்நிகழ்ச்சியை பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், கல்வியாளர்கள் மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வின் அனுசரணையாளர்களாக நாட்டின் IT மற்றும் BPM துறையின் வளர்ச்சியை ஆதரித்து, சக்தி வழங்கும் முன்னணி தொழில்நுட்பநிறுவனங்கள்முன்வந்துள்ளன. SimCentric Technologies, Axiata Digital Labs, HSenid Axcenze, HCL Tech, Topjobs, Dialog, LSEG, Abans மற்றும் நோர்வே தூதரகத்தின் ஆதரவு உட்பட பிற அனுசரணையாளர்கள் தங்கள் முழு ஒத்துழைப்பு மற்றும் ஆதரவை வழங்கிய நிறுவனங்களாக அமைந்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கதாகும். அவர்களின் அர்ப்பணிப்பு இந்த நிகழ்வை சாத்தியமாக்கியுள்ளதுடன் எண்ணற்ற வாய்ப்புகளுக்கான தளத்தை வழங்குகிறது. இது IT மற்றும் BPM துறையில் வேலைவாய்ப்புக்களை பூரணப்படுத்தவதற்கானகதவுகளைத் திறக்கிறது.

நிகழ்வின்போது பல்கலைக்கழக துணைவேந்தர் தனது உரையில் பல முக்கியமான விடயங்களை எடுத்துரைத்தார். கணினி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் வணிகம் சார்ந்த மாணவர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் உட்பட இது போன்றவாய்ப்பு இதற்கு முன் கிடைக்காதவர்களுக்கு இந்த தொழில் கண்காட்சி ஒரு குறிப்பிடத்தக்க தளமாக விளங்குகிறது. வரலாற்று ரீதியாக, இதே போன்ற நிகழ்வுகள் பெரும் பாலும் கொழும்பு போன்ற பெருநகரங்களில் தனிநபர்களுக்கு அணுகக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், இந்த தொழில் கண்காட்சியானது கிழக்கு பிராந்தியத்தைச் சேர்ந்த தனிநபர்களுக்கு வாய்ப்புகளை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் பல துறைகளில் வெவ்வேறு சாத்தியக்கூறுகளை ஆராய அவர்களுக்கு உதவுகிறது.

பல்கலைக்கழகமும் அதன் ஊழியர்களும் மற்றும் மாணவர்களை இங்கு கூடியிருக்கும் அனைத்து தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள், பட்டதாரிகள் மற்றும் இளங்கலை பட்டதாரிகளுக்கு, தங்கள் திறமைகள் மற்றும் திறன்களை வெளிப்படுத்தும் விதமாக இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள ஊக்குவிக்கிறது. இந்த தொழில் கண்காட்சி மாணவர்களை அவர்களின் கனவு வேலைவாய்ப்பை நோக்கி வழிநடத்தும் ஒரு ஊடகமாக செயல்படுகிறது. இது புதிய வாய்ப்புகளை சந்திக்கும் இடமாகும். இது மாணவர்கள் தொழில்துறை தலைவர்களுடன் இணைவதற்கும், வளர்ச்சி மற்றும் வெற்றிகள் நிறைந்த எதிர்காலத்தை இயலுமையாக்குவதற்கும் அனுமதிக்கிறது.

இந்த நிகழ்வு முழுவதும், மாணவர்கள் பரந்த அளவிலான தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் தொடர்பினை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளனர். இதனூடாக IT மற்றும் BPM தொழிற்துறையின் சமீபத்திய போக்குகள், தொழில்நுட்பங்கள் மற்றும் வாழ்க்கைப் பாதைகள் பற்றிய நுண்ணறிவுகளைப் பெறுகின்றனர். இந்த விலைமதிப்பற்ற தளத்தை இணைப்பதற்கும் கற்றுக் கொள்வதற்கும் தங்கள் திறனை வெளிப்படுத்துவதற்கும் அதிகம் பயன்படுத்துமாறு மாணவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். அத்துடன் மாணவர்களின் திறமைகள் பிரகாசிக்கவும் இவ் எண்ணற்ற வாய்ப்புகளைப் பயன்படுத்துமாறும் உபவேந்தர் கேட்டுக்கொண்டார்.

சமகாலத்தில் IT மற்றும் இயந்திர கற்றல் துறையில் மாணவர்களை ஈடுபடுத்துவதில் அதிக கவனம் செலுத்தப்படுவதாக பல ஆய்வுகள் கூறுகின்றன. இந்த ஆய்வுகள் கூட செயற்கை நுண்ணறிவின் (AI) வளர்ச்சியில் மாணவர்களின் ஈடுபாட்டை முதன்மைப்படுத்துகின்றன. இதற் கேற்ப துணைவேந்தர் அவர்கள் மனித நேயம் மற்றும் சமூக விஞ்ஞானப் பாடப்பிரிவைச் சேர்ந்த மாணவர்களையும் பங்கேற்குமாறு ஊக்குவித்தமை எடுத்துக் காட்டத்தக்கதாகும். இந்த தொழில் கண்காட்சி பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாணவர்களுக்குநடைமுறைவேலை உலகிற்கான வாய்ப்புகளைத் திறக்கும் என்று நம்பப்படுகிறது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் இயல் விருது விழா 4இல் ரெரன்டோவில்!




ஒவ்வோர் ஆண்டும் உலக அளவில் சிறந்த தமிழ் இலக்கிய சேவையாளர் எனக்கருதும் ஒருவருக்கு,'இயல் விருது' எனும் வாழ்நாள் தமிழ் இலக்கிய சாதனை விருது கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் அமைப்பால் வழங்கப்படுகிறது.

2022 ஆம் ஆண்டுக்கான வாழ்நாள் சாதனையாளருக்கான இயல்விருதை இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட இலக்கிய படைப்பாளியும் தற்போது ஆஸ்திரேலியாவில் வதிபவருமான எழுத்தாளர் லெ. முருகபூபதியும், இந்தியாவில் பெங்களூரில் வதியும் பிரபல எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர் பாவண்ணனும் பெறுகிறார்கள்.

இயல்விருது விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை கனடா ரொரன்டோ - ஸ்காபரோவில் எஸ்டேட் விருந்து மற்றும் நிகழ்வு மையம் மண்டபத்தில் நடைபெறும்.

இந்த வாழ்நாள் விருது ஒரு படைப்பாளிக்கோ, கல்வியியலாள ருக்கோ, நூல்வெளியீட்டாளருக்கோ, விமர்சகருக்கோ, வேறு ஏதேனும் ஒரு வகையில் சிறந்த தமிழ் தொண்டாற்றியதாகக் கருதுபவர்களுக்கோ 2001 ஆம் ஆண்டு முதல் அளிக்கப்படுகிறது.

இதுவரையில் வாழ்நாள் தமிழ் இலக்கிய சாதனைக்காக கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் இயல் விருது பெற்றவர்கள் இந்தியாவிலிருந்து சுந்தரராம சாமி, வெங்கட் சாமிநாதன், அம்பை, எஸ். ராமகிருஷ்ணன், நாஞ்சில் நாடன், தியோடர் பாஸ்கரன், கோவை ஞானி, ஜெயமோகன், ஐராவதம் மகாதேவன், என். சுகுமாரன், வண்ணதாசன், இமையம், சு. வெங்கடேசன், இரா. வெங்கடாசலபதி. ஐக்கிய அமெரிக்காவிலிருந்து ஜோர்ஜ் எல். ஹார்ட், இலங்கையிலிருந்து கே. கணேஷ், டொமினிக் ஜீவா, இ.மயூரநாதன், இங்கிலாந்திலிருந்து தாஸீஸியஸ், பத்மநாப ஐயர், லட்சுமி ஹோம்ஸ்ட்ராம், ஆஸ்திரேலியாவிலிருந்து எஸ். பொன்னுத்துரை ஆகியோர். எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இயல்விருது விழாவுக்கு பிரதம விருந்தினராக தமிழ் இலக்கிய ஆர்வலர் அறிஞர் தோமஸ் ஹிடோஷி ப்ரூக்ஸ்மாவும், பிரபல எழுத்தாளரும் நாவலாசிரியையுமான கிம் எச்லினும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இம்முறை புனைவு எழுத்துக்கான விருது 'மன்னார் பொழுதுகள்' நாவல் எழுதிய வேல்முருகன் இளங்கோவுக்கும் அபுனைவு விருதுக்கு 'மூவந்தியில் சூலுறும் மர்மம்' என்ற படைப்புக்காக சாம்ராஜுக்கும்,கவிதைக்கான விருது கவிஞர் சுகிர்தராணிக்கும், இலக்கிய ஆய்வு மற்றும் மொழிபெயர்ப்பு இலக்கியத்துக்கான விருது எழுத்தாளர் சிவசங்கரிக்கும் இலக்கியச் சாதனைக்கான விருது கனடாவிலிருந்து நீண்ட காலமாக பதிவுகள் இணைய இதழை நடத்தி வரும் வ.ந.கிரிதரனுக்கும் வழங்கப்படுகிறது.

எழுத்தாளர் முருகபூபதியின் சிறுகதை தொகுதிகள் ஏழும், புதின, சிறுவர், பயண இலக்கியம் மூன்றும், கடித இலக்கியம், நேர்காணல் தொகுதி இரண்டும், கட்டுரை தொகுதிகள் பதினேழும் இதுவரையில் வெளிவந்துள்ளன.

இரண்டு தடவைகள் இலங்கையில் தேசிய சாகித்திய விருது பெற்றிருக்கும் முருகபூபதி, ஆஸ்திரேலியா தினத்தின்போது சிறந்த பிரஜைக்கான விருதும், விக்ரோரியா மாநில பல்தேசிய கலாசார விருதும் பெற்றிருப்பவர். முன்னர் வீரகேசரியில் துணை ஆசிரியராகவும் பணியாற்றியிருப்பவர்.

எழுத்தாளர் பாவண்ணனின் கவிதைத் தொகுதிகள் மூன்றும், சிறுகதை தொகுதிகள் 21உம், நாவல்கள் மூன்றும், குறுநாவல்கள் மூன்றும், கட்டுரை தொகுப்புகள் 34, சிறுவர் இலக்கியத் தொகுப்புகள் ஒன்பதும், மொழிபெயர்ப்புகள் (கன்னடத்திலிருந்து) 24 நூல்களும், (ஆங்கிலத்திலிருந்து) ஐந்து நூல்களும் (எல்லாமாக நூறு நூல்கள்) இதுவரை வெளியாகியுள்ளன.

பாவண்ணன், ஏற்கனவே புதுச்சேரி அரசினதும், தமிழ்நாடு இலக்கியச்சிந்தனை அமைப்பு மற்றும் கதா அமைப்பு, இந்திய சாகித்திய அகாதெமி விருது, தமிழக அரசின் விருது, இந்திய அமெரிக்க வாசகர் வாழ்நாள் சாதனை விருது, விளக்கு அமைப்பு புதுமைப்பித்தன் விருது உட்பட பல விருதுகள் பெற்றிருப்பவர்.

கலை, இலக்கிய ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், மற்றும் இதழாசிரியர்கள் பரிபாலன சபை உறுப்பினர்களாக அங்கம் வகிக்கும் கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் செயலாளராக பிரபல எழுத்தாளர் அ. முத்துலிங்கம் இயங்கி வருகின்றார்.

கொவிட் பெருந்தொற்றுக்காலத்தில் இந்த வருடாந்த இயல்விருது விழா மெய்நிகரில் நடந்தது. இம்முறை மண்டபத்தில் இந்த விழா ஞாயிறன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (05)

# ஆறு அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் மீண்டும் குறைக்கப்பட்டன!

கொழும்பு, ஜூன் 02

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் லங்கா சதொச நிறுவனம் ஆறு அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை மீண்டும் குறைத்துள்ளது.

நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோ வெள்ளை சீனியின் விலை 10 ரூபா குறைக்கப்பட்டு 229 ரூபாவாகவும் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் விலை 11 ரூபா குறைக்கப்பட்டு 114 ஆகவும் விற்பனை செய்யப்படவுள்ளது.

மேலும், ஒரு கிலோகிராம் சிகப்பு பருப்பின் விலை 11 ரூபா குறைக்கப்பட்டு 314 ரூபாவாகவும் ஒரு கிலோ மாவின் விலை 15 ரூபா குறைக்கப்பட்டு 210 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

லங்கா சதொச ஒரு கிலோ வெள்ளை நாட்டு அரிசியின் விலை 4 ரூபாவால் குறைத்து 175 ரூபாவாக விற்பனை செய்யப்படவுள்ளது. (05)

# காதலியைப் படுகொலை செய்து குழிதோன்றிப் புதைத்த காதலன்!

மதவாச்சிப் பகுதியில் பெண் ஒருவரைக் கொலை செய்து புதைத்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அப்பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரைக் கடந்த சில தினங்களாகக் காணவில்லை என அவரின் உறவினர்களால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் காணாமல்போன பெண்ணின் காதலனிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கமைய குறித்த நபர் தனது காதலியான காணாமல்போன பெண்ணைப் படுகொலை செய்து தனது தோட்டத்தில் புதைத்துள்ளார் என வாக்குமூலம் வழங்கினார்.

பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (02)

# குறைக்கோம்

## ஓட்டோ உரிமையாளர் சங்கம் அறிவிப்பு

பெற்றோல் விலை குறைக்கப்பட்ட போதிலும் கட்டணத்தை குறைப்பதில்லை என ஓட்டோ உரிமையாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.


இந்த பெற்றோல் விலை திருத்தத்தின் மூலம் தமக்கு போதிய நிவாரணம் கிடைக்கவில்லை என அகில இலங்கை ஓட்டோ உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார்.

வாராந்த எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரித்தால் ஓட்டோ கட்டணத்தை மாற்றுவது தொடர்பாகப் பரிசீலிக்கப்படும் என தொழிற்சங்கங்கள் முன்னர் அறிவித்திருந்தன.

திருத்தப்பட்ட எரிபொருள் விலை நேற்று முதல் அமுலுக்கு வருகிற போதும், கட்டண மீளாய்வுக் குழுவை நியமிக்குமாறு லலித் தர்மசேகர அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

புதன் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள்களின் விலைகள் திருத்தப்பட்டுள்ளன என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. (05)

# காரைதீவு பிரதேச செயலகத்தால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள்



(நூருல் ஹுதா உமர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள டெங்கு நுளம்பு பெருக்கத்தை தடுக்கும் முகமாக காரைதீவு பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவு, அனர்த்த முகாமைத்துவப்பிரிவு மற்றும் உளவளப் பிரிவு உத்தியோகத்தர்களின் ஆதரவு மற்றும் பங்குபற்றலுடன் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையொன்று பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜனின் வழிகாட்டலின் கீழ் இடம்பெற்றது.

கிராம உத்தியோகத் தர்களின் ஒருங்கிணைப்புடன் நேற்று (வியாழக்கிழமை) காரைதீவு 01 மற்றும் காரைதீவு 06 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயம் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளில் டெங்கு ஒழிப்பு சிரமதானம் நடைபெற்றது.

இதன்போது ஆலயத்தை சூழவுள்ள வடிகான்கள் அனைத்தும் சுத்தம் செய்யப்பட்டன. இந்தச் சிரமதானத்தில் காரைதீவு பிரதேச செயலக அதிகாரிகள் பலரும் கலந்து ஆதரவு வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (05)

# தெற்கில் ஒருவர் வெட்டிக்கொலை

ஹொரண பகுதியிலுள்ள ஆடைத்தொழிற்சாலைக்கு முன்னால் வைத்து நபர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் புதன்கிழமையிரவு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாணந்துறை, சுனாமி வீட்டுத் திட்டப் பகுதியில் வசிக்கும் நபரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்.

கொலையாளி அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் இறங்கியுள்ளனர். (02)

# காலி கடற்கரையில் பெண்ணின் சடலம்

காலி-கோட்டைகடற்கரைப் பகுதியில் பெண் ஒருவரின் சடலத்தைப் பொலிஸார் நேற்றுக் காலை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்டுள்ள பெண்ணின் சடலம் இது வரை அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். 35 முதல் 40 வயதுக்கிடைப்பட்ட ஐந்து அடி உயரமான பெண்ணே இவ்வாறு சடலமாக மீட் கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட் டுள்ளனர்.

சடலம் கராப்பிட்டி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)

# யூனானி வைத்தியர் நியமனத்தில் தவறு ரிஷாத் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தார்!

ஆயுர்வேத வைத்தியர்களை நியமனம் செய்யும் போது ஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி வைத்தியர்களை உள்ளடக்கி நியமனம் வழங்கப்படுவது வழக்கமானதொன்றாக இருந்து வந்தது. தற்போது இந்த நடைமுறை மீறப்பட்டுள்ளது.

இம்முறை 100 இற்கும் மேற்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களுக்கு மட்டும் நியமனம் வழங்குவது, யூனானி வைத்தியர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி நியமனங்கள் தொடர்பில், பாதிக்கப்பட்டவர்கள் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீனை தொடர்புகொண்டு கவலை தெரிவித்ததையடுத்து, அவர் ஜனாதிபதிக்கு இது தொடர்பில் அவசர கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

ஆயுர்வேத வைத்தியர்கள் நியமனங்களின் போது, ஒரே முறையில் 7 ஆயுர்வேத வைத்தியர்களும் இரு யூனானி வைத்தியர்களும் ஒரு சித்த வைத்தியரும் உள்வாங்கப்பட்டு, இந்த நியமனங்கள் வழங்கப்பட்டு வந்தன.

ஆனால், இம்முறை வழங்கப்பட இருக்கின்ற ஆயுர்வேத வைத்தியர்களுக்கான நியமனங்களில், யூனானி வைத்தியர்கள் உள்ளீர்க்கப்படாமை சந்தேகத்தை தோற்றுவித்துள்ளதுடன், இது யூனானி வைத்தியர்களுக்கு இழைக்கப்படும் அநீதி என தான் கருதுவதாகவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுளார்.

மேற்படி ஆயுர்வேத வைத்தியர்களின் நியமனத்தில், யூனானி வைத்தியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கவனஞ் செலுத்துமாறும் பாதிக்கப்பட்டுள்ள யூனானி வைத்தியர் களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதுடன், மேற்படி நியமனத்தில் யூனானி வைத்தியர்களையும் இணைத் துக்கொள்வதற்குத் தேவையான பணிப் புரையை உரிய அதிகாரிகளுக்கு வழங்க வேண்டுமெனவும் அவர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.


இதேவேளை, மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிாத் பதியுதீன், ஜனாதிபதியின் செயலாளரை தொலைபேசியில் தொடர்புகொண்டு, யூனானி வைத்தியர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கின்ற அநீதி தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (05)



காலைக்கதிர்
Kalaikkathir




# வாழ்வின் வெற்றிக்கு வழிகாட்டும் கல்வி



கற்கும்போது கசப்பாகவும் கற்ற பின் கரும்பு போல் சுவையாக இருப்பது கல்வி. மாந்தர்கள் ஆகிய எம்மை பீடித்துள்ள அச்சங்களை போக்கி மடமை களையும் பேதமைகளையும் வேரொடு தகர்த்து எறிந்து அழிக்கும் ஓர் சக்தி மிகுந்த ஆயுதம் கல்வி. ஒருவருடைய அறிவுக்கண்ணை திறக்கும் திறவு கோலாக கல்வி சிறப்பிக்கப்படுகின்றது.

ஒருவனிடம்எந்தவிதமாகஅனைத்து செல்வங்கள் நிறைந்துள்ள போதும் அச்செல்வங்கள் கல்விச் செல்வத்திற்கு இணையாக அமையாது இருப்பதோடு கல்விச் செல்வமே அனைத்து செல் வங்களிலும் இன்றியமையாத ஒன்றாக அமைகின்றது. இதனை வெளிப்படுத் தும் முகமாக,

'கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு

மாடல்ல மற்றையவை' எனும் குறள்பாக்கள் வெளிப்படுத்துகின்றன. சிறந்த முறையில் கற்று தேர்ந்த ஒருவன் அரசனிலும் பார்க்க சிறப்புடையவனா வான்.

'மன்னனும்மாசறகற்றோனும்சீர்தூக்கின் மன்னனிற் கற்றோன் சிறப்புடையோன் மன்னனிற்கு தன்தேசம் அல்லால் சிறப்பில்லை

கற்றோனிற்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு'

எனும் மூதுரைப் பாடல் அடிகள் பறைசாற்றுகின்றன. அதாவது ஒரு நாட்டின்மன்னனானவன்எந்ததேசத்தை ஆட்சி புரிகின்றானோ அத் தேசத்திலேயே அவனுக்கான புகழும் மதிப்பும் நிறைந் திருக்கும். இருப்பினும் நன்கு கற்றுத் தேர்ந்த கற்றறிந்த ஒருவனுக்கு அவன் செல்கின்ற தேசத்தில் அவனுக்காக புகழ் மாலைகள் அவன் கழுத்தை அலங்கரிக்க காத்துக்கொண்டிருக்கும். இதிலிருந்து கல்வி கற்ற ஒருவனின் சிறப்பும் கல்வியின் மகிமையும் எடுத்துக் காட்டப்படுகின்றது.

படிக்காமல் இருப்பதை விட பிறக் காமல் இருப்பதே மேல் என்றார் பேரறி ஞர் பிளேட்டோ. இது மட்டுமின்றி கற் காமல் இருப்பவர்கள் மட்டும் அன்றி கற் பதற்கான வாய்ப்புக்கள் நிறைந்திருந்த வேலையிலும் கல்விச் செல்வத்தை அடைந்துகொள்ளவிளையாதவர்களை விலங்குகள் என்கின்றார். வள்ளுவர் பெருந்தகை. கல்வி கண் போன்றது கல்வியை பெறாதாதவர்கள் கண்ணி ருந்தும் பார்வை இழந்தவர்களாக கருதப்படுவார். இதனை அனைத்து மூடர்களிற்கும் உணர்த்தும் முகமாவ ஒரு படி மேலே சென்று

'கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு

புண்ணுடையர் கல்லாதவர்' என கற்காதோரை திருவள்ளுவர் இழிவு படுத்துகின்றார். அதாவது இரு கண் களை கொண்டவர்களாக கருதப்படு வார். யாரெனின் கல்வி கற்றவர் யாரெ னில்கல்விகற்றவர்கலேஅதற்குமாறாக கல்வி கற்று தேறாத கல்வி கற்காதவர் தங்களின் இரு கண்களுக்கு பதிலாக புண்களை கொண்டவர்களாகவே கருதப்படுவார். அது மட்டுமன்றி கல்வி கற்றவரின் சிறப்பையும் கல்வி கல் லாதவரின் இழிவையும் ஒப்பிடும் வேளையில் நெருப்பில் வாட்டினும் வளைய வேண்டுமென்பதற்காக வளைகின்ற மூங்கிலோ அரசன் அம ரும் பல்லக்கில் அவனது முடிக்கு மேலே நின்று பெருமை கொள்ளும். நீண்டு உயர்ந்து வளரும் மூங்கிலோ கலைக் கூத்தாடிகளின் கையகப்பட்டு புவியெல் லாம் அலைந்து திரிந்து அவர்களினது கால்களில் மிதியுண்டு தன் வாழ்நாளை கழிக்கும் என்ற அறக்கருத்தை

'வருத்தவன் வேய அரசன் மாமுடி யின் மேலாம்

வருத்தாத மூங்கில் தரித்திரமாய்

வேழுமர் கையகப்பட்டு மாதினியெல் லாம் திரிந்து

தாழுமவர் தம்மடிக் கீழ் தானே'

என்ற நீதிவெண்பா வெளிப்படுத் தி கற்றோரின் சிறப்பை போற்றுகின் றது.

தமிழ்ச் சமூகத்தின் சிறப்புமிக்க மனிதராக புகழ் பெற்று காணப்படும் ஔவையார் அவர்கள் கல்வியின் அவசியத்தை

'கற்கை நன்றே கற்கை நன்றே

பிச்சை புகினும் கற்கை நன்றே'

என்னும் பாடலடிகளினூடாக பறை சாற்றுகின்றார்கள். அதாவது எவ்வளவு கடினப்பட்டாவது உடலை வருத் தியோ, மனதை வருத்தியோ கல்வியை பெற வேண்டும் என்னும் கருத்து தொன்று தொட்டு காணப்பட்டமைக்கு இதுவே சிறந்த ஆதாரமாக கொள்ளப்படுகின்றது. மேலும் ஔவையாரின் கருத்தை உறுதிப்படுத்தும் விதமாக தென்னாபிரிக் காவில் ஜனாதிபதியாக இருந்த நெல்சன் மண்டேலோ

'இன்றைய உலகை மாற்றக் கூடிய ஓர் ஆயுதம் உள்ளது. அதன் பெயர் கல்வி' என்றார்.

அத்தோடு பாரததேசத்து பதினொரா வது தலைவராகிய அப்துல் கலாம் அவர்கள் 'படிப்பால் தான் பாரதத்தை பாராள செய்யலாம்' என்றார். அதும ட்டுமன்றி பாரததேசத்திற்கு சுகந்திரம் பெற்றுக்கொடுத்த தந்தையாகிய மகாத்மா காந்தி 'இவ்வுலகில் அமைதி யைக்காண வேண்டுமெனின் சிறுவர்க ளிற்கு கல்விபுகட்ட வேண்டும்' என்றார்.

இவ்வாறு அனைத்து அறிஞர்க ளாலும், அனைத்து புகழ் பெற்ற சாத னையாளர்களாலும் கல்வியாகிய அழிவற்ற செல்வம் பற்றிய கருத்துக்கள் வெளியிடப்படுவதற்கான காரணத்தை விவேக சிந்தாமணி,

'வெள்ளத்தால் போகாது

வெந்தணலால் வேகாது வேந்தரால்

கொள்ளவும் முடியாது கொடுத்தாலும்

நிறைவன்றி குறைவுறாது'

– எனும் வரிகளினூடாக வெளிப் படுத்துகிறது.

கல்வியானதுஒருசாமானியனையும் உலகம் போற்றும் சாதனையாளர்களாக வெளிக்கொணரஉதவிபுரிகிறது.அதன்படி கல்வியின்விந்தையால்உலகம்போற்றும் பல்வேறு சாதனையாளர்கள் வடிவம் பெற்றுள்ளனர். அவர்களுள் சாக்கிரட் டீஸ், அப்துல்கலாம், பிளேட்டோ, அம்பேத்கர், அரிஸ்ரோட்டல், ஆபிரகாம் லிங்கன் முதலியோர் முதன்மை பெற்ற வர்களாவர்.

உலகின் முதலாவது தத்துவஞானி யான சாக்கிரட்டீஸ் நஞ்சூட்டப்படும் வரை புத்தகம் படித்துக் கொண்டிருந்தார். அவர் கல்வி மீது கொண்ட அன்பே அவரை சிறந்த தத்துவஞானி ஆக்கியது. அது மட்டுமன்றி அப்துல்கலாம் அவர்கள் விஞ்ஞானக் கல்வி மீது கொண்ட அதி க ஆர்வமும் ஈடுபாடலும் தான் அவரை உலகம் போற்றும் மாமனிதனாக உரு வெடுக்கச் செய்தது. தமிழ்ச் சமூகத் தின் சிறந்த பெண்மணியாகிய ஔவை யார் தழிழ்ச் சமூகத்தில் தலைசிறந்து விளங்கக் காரணம் தழிழ் மீது அவர் கொண்ட புலமையே ஆகும்.

ஆதலால் அனைத்து சாதனையா ளர்களும் சாதனையாளர்களாக உருவெடுக்க கல்வியே பங்களிப்பு செய்கிறது எனலாம். ஆதலால் தான் முன்னோர்களும் பெரியவர்களும் சிறுவயதிலிருந்தே சிறார்களிற்கும் 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' எனும் ஆத்தி சூடி வாக்கியத்தை அவர் களின் உயிர் மூச்சாக்குகின்றனர்.

'கற்க கசடற கற்றவை கற்ற பின்

நிற்க அதற்குத் தக' என்னும் திருவள்ளுவரின் கூற்றிற்கிணங்க கல் வியை வெறும் மேம் போக்காக கற்காது நன்கு ஆழமாக கற்று நாம் கற்றுத் தேர்ந்த கல்வியின் அறத்திற்கேற்ப வாழ்வியல் கருமங்களை ஆற்றும் பொருட்டு கல்வியை ஐயந்திரிபுறக்கற்று சீரும் சிறப்புமாக வாழ்ந்து வாழ்வில் மேன்மை அடைவோமாக.

செல்வி. அம்பிகா ராதாகிருஷ்ணன்
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



# விட்டுக்கொடுப்பு

ஒரு மாநாட்டு மண்டபத்தில் ஒரு பேராசிரியர் விரிவுரை நிகழ்த்திக்கொண்டிருக்கிறார். ஏறத்தாழ நூறு பேருக்குக் குறையாமல் அந்த விரிவுரையைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். பேராசிரியர் திடீரென ஒரு பரீட்சார்த்தத்தில் இறங்குகிறார்.

அனைவருக்கும் தலா ஒரு பலூன் வழங்கப்பட்டு காற்றூதிக் கட்டும்படி பணிக்கப்படுகிறது. கட்டப் பட்ட பலூன்களில் அவரவர் பெயர்கள் எழுதப்பட்டு மண்டபத்தின் மூலையில் அமைந்த ஒரு சிறிய அறைக் குள் பெயர் எழுதப்பட்ட நூறு பலூன்களும் போடப் பட்டன. அனைவரும் தத்தம் இருக்கையில் அமர்ந்த னர்.

பேராசிரியர் 'உங்கள் அனைவருக்கும் ஐந்து நிமிடங்கள் தரப்படுகின்றன. உடனடியாக உங்கள் பலூன்களை எடுத்துக்கொள்ளுங்கள்' என்ற அறிவுறுத் தலை விடுத்ததுதான் தாமதம் அனைவரும் தத்தம் பெயர் எழுதப்பட்ட பலூன்களை முண்டியடித்துத் தேடினர். பத்து நிமிடங்கள் ஆகியும் ஒருவராற் கூடத் தமது பலூன்களை எடுக்க முடியவில்லை.

பேராசிரியர் சிரித்துக்கொண்டு அனைவரையும் விலகி நிற்கும்படி கூறிவிட்டு ஒவ்வொருவரையும் கையில் ஒவ்வொரு பலூன் எடுக்கும்படி கூறினார். இப்பொழுது அனைவர் கைகளிலும் ஒரு பலூன். அடுத்து 'உங்கள் கைகளில் உள்ள பலூன் யாருடையதோ அதை அவரிடமே ஒப்படையுங்கள்' என்றார் பேராசிரியர். அடுத்த சில நிமிடங்களில் அனைவர் கைகளிலும் அவரவர் பலூன்கள் இருந்தன.

அடுத்தவர்களுடைய நியாயமான சந்தோசம் உங்களாற் தடைப்படுகின்றது என்றால் தயவுசெய்து ஒரு விட்டுக்கொடுப்பைச் செய்யுங்கள். அது வழங்கும் உங்களுக்கும், பெற்றுக்கொள்ளும் நபருக்கும் மகிழ் வையே தரும். விட்டுக்கொடுப்பவன் வீழ்ந்ததில்லை தட்டிக்கொடுப்பவன் தாழ்ந்ததில்லை. மாணவர்களுக்கு இதை இளவயதிலேயே புரியவையுங்கள்.

காலைக்கதிர் Kalaikkathir

# கொடுமையிலும் கொடுமை



என்.சத்தியமூர்த்தி

## அக்கரை / றை அலசல்

யாழ் குடநாடு, பள்ளிகளில் இருந்து மாணவர்களின் இடைவிலகல் வீதம் திடீரென்று அதிகரித்துள்ளது என்று செய்திகள் தெரிவிக்கின்றன. சில மாதங்களுக்கு முன்னர் பள்ளி மாணவர்களிடையே போதை மருந்து பாவனை அதிகமாகி உள்ளது என்று அரசே அறிக்கை வெளியிடும் அளவிற்கு சூழ்நிலை முற்றியது.

இந்த இரண்டுமே குடநாடு மட்டுமல்ல, பிற தமிழர் பகுதிகளிலும் கூட அதிகரித்திருக்க வாய்ப்புகள் உள்ளன. இது போன்றே, தென்னிலங்கையில் இருபால் இளைஞர்கள் மற்றும் பள்ளி மாணவர்களிடையே போதை பழக்கம் அதிகரித்துள்ளதாகவும் முன்னர் ஆய்வறிக்கைகள் வெளிவந்தன. மாணவ – மாணவியர் இடைநிறுத்தம் குறித்து செய்திகள் இதுவரை வெளிவற்ததாக தகவல்கள் இல்லை.

இவை இரண்டும் ஒரே புள்ளியை நோக்கி நகர்கின்றன என்றாலும், போதை பழக்கம் மற்றும் இடைவிலகல் ஆகிய இரண்டுமே தனித்தனியான பிரச்சினை. அதே சமயம், போதை பொருளுக்கு அடிமையான மாணவ – மாணவியர், பள்ளிகூடங்களில் இருந்தும் பல்கலைகழகங்களில் இருந்தும் விலகுவது தவிர்க்கமுடியாத இரட்டை குழந்தைகள்.

இவற்றிற்கு காரணம் பற்பல. குறிப்பாக கோவிட் பெருநோய் காலத்தில் வீட்டு சுற்றுப்புறங்களிலேயே முடங்கி விட்ட மாணவ – மாணவியர் மற்றும் இளைஞர் – இளைஞகள், போதை பொருள் மற்றும் குடிபழக்கத்திற்கு அடிமையாகி இருக்கலாம். சாதாரண வாழ்க்கையே முற்றும் முழுவதுமாக முடங்கிப்போன அந்த காலகட்டத்திலும் இரண்டு தொழில்கள் மட்டும் கன ஜோராக தொடர்ந்து வந்தன.

### அழிவு பாதை

ஒன்று, போதை பொருள் மற்றும் கசிவு போன்ற கள்ளசாரய வியாபாரம். மற்றது, விபச்சாரம். தற்போதும் பள்ளி மாணவ – மாணவியர் இடையே போதை பழக்கம் மற்றும் இடைநிறுத்தல் ஆகியவை தொடர்கிறது என்று அறியும் போது, அவை இரண்டுமே, நாட்டின் எதிர்காலத்தை அழிவு பாதையில் இட்டு செல்கிறது என்பதே உண்மை.

இரண்டாவது, குறிப்பாக மாணவியர் மற்றும் பிற இளம்பெண்களை சார்ந்தது. இது போன்று, போதை பொருளுக்கு அடிமையாகும் மாணவர்களை வியாபாரிகளும் பயன்படுத்தி, பிற மாணவர்களிடையே இந்த பழக்கத்தை பரவ செய்வது, உலகளவிற்கும் உண்மை.

அதில் குறிப்பாக பெண்கள், தவறான பாதையில் இன்னும் பல மைல்கள் பயணப்படுவது தவிர்க்க முடியாதது. அதில் ஒரு சிலராவது விபச்சாரத்தில் தள்ளப்படுகிறார்கள். இதுவும் தவிர்க்க முடியாத விடயம்.

இவை அனைத்துமே பல்வேறு பாதைகளில் பயணிக்கும் என்றாலும், அனைத்துமே அந்த மாணவ – மாணவியரை அழிவு பாதையில் கொண்டு செல்கிறது என்பது ஆய்ந்தறிந்த உண்மை. இல்லையென்றாலும், கை புண்ணிற்கு கண்ணாடி தேவை இல்லை.

### நிரம்பவே வித்தியாசம்

இவை அனைத்திலுமே, தமிழர் மற்றும் நாட்டிலுள்ள மூன்று பிற இனத்தவர்களுக்கும் இடையே நிரம்பவே வித்தியாசம் உள்ளது. மலையக தமிழர்களை பொறுத்தவரையில், அவர்களுடைய மாணவ – மாணவியரின் தலைஎழுத்து நல்லபடியாக மாற்றி அமைக்கபடும் காலகட்டத்தில், பெருநோய் அவர்களது வாழ்கை முறையையே தூக்கி அடித்தது.

தொடர்ந்து, பெருந்தோட்டங்களில் வேலை கிடைத்து, அதனால் வீட்டு வருமானத்தை உயர்த்திக் கொள்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்தால், அதுவே பெரிய விடயம். அவர்களில் பலரும், தலைநகர் கொழும்பு உள்ளிட்ட நகர பகுதிகளில் தாங்கள் விட்டுசென்ற வேலைவாய்ப்புகளை மீண்டும் பெற்றுக் கொள்ள முடிந்தால், அதுவே பெரிய காரியம் என்றாகி விட்டது.

சமகால முஸ்லிம் இளைஞர்களுக்கு ஈஸ்டர் தாக்குதல்களுக்கு பின்னர் வாழ்க்கை, சமுதாயம் மற்றும் (இலங்கை) தேசம் குறித்த அவர்களது அணுகுமுறையே மாறிவிட்டதாக சில செய்திகள் தெரிவித்தன. இது குறித்து, அதிக விவரங்கள் பொதுவெளியில் இல்லை.

அதே சமயம், அவர்களில் யாரோ செய்த தவறுகளுக்கு அந்த இனமே தீவிரவாதி முத்திரையை தாங்கி நிற்கும் அவலம் தொடர்கிறது. இதில், அடுத்த வீடு, பக்கத்து தெருக்களில் இருக்கும் நண்பர்கள் அவர்களை ஒதுக்கி வைப்பது, சந்தேக கண்களுடன் பார்ப்பது போன்றவை தொடரவே செய்யும். குறிப்பாக சிங்கள மாணவர்களின் வீடுகளில் பெரியவர்களின் பேச்சு அவர்கள் வீட்டு குழந்தைகளை வழி நடத்துவது தவிர்க்க முடியாத விடயம்.

### முற்பகல் செய்யின்...

இவையெல்லாம் இவ்வாறு என்றால், பெரும்பான்னை சமுதாயத்தையும் போதைபொருள் மற்றும் பள்ளி இடைநிறுத்தம் பாதித்தே உள்ளது என்பதே உண்மை. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்று, தமிழர் தரப்பு எண்ணி அகம் மகிழலாம். ஆதனால், இருதரப்பினருக்கும் எந்தவித பயனும் இல்லை என்பதும் உண்மை.

கோவிட் தொற்று காரணமான முழு அடைப்பில், அனைத்து தரப்பினருமே பல்வேறு பாதிப்புகளுக்கும் உள்ளானார்கள். அதில் இனப்பாகுபாடுகளுக்கு இடமில்லை. அது போன்றே, கடந்த ஆண்டு துவக்கம், நான்கு இனத்தவருமே தாங்க முடியாத பொருளாதார பிரச்னைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இதில், பொருளாதார வித்தியாசங்கள் அடிபட்டுபோயின. என்றாலும், வசதி படைத்தவர்கள் தங்களது சில வசதிகளை 'தியாகம்' (?) செய்யவேண்டிய நிர்பந்தம் உருவாயிற்று. ஆனால் வறியவர்களுக்கோ, அந்த ஒரு வேளை, இரு வேளை சாப்பாட்டிலும் மண் விழுந்தது.

நாடே பிச்சை எடுக்கும் நிலைமைக்கு தள்ளப்பட்ட பின்னர், யாரிடம் யார் பிச்சை கேட்பது, யார், யாருக்கு, பிச்சை அளிப்பது? இதுவும் அனைத்து இனத்தவர்களுக்கும் தரப்பினருக்கும் பொதுவான சாபக்கேடே.

### பிரச்னைகள், சாபகேடுகள்

ஆனால், தமிழர்களுக்கு, குறிப்பாக, வடக்கு மற்றும் கிழக்கு வாழ் தமிழர்களுக்கு என்று தனியான பிரச்சினைகள், சாபக்கேடுகள் உள்ளன. அதற்கு பெருந்தொற்று மற்றும் நாட்டின் பொருளாதார நிலைமை மட்டுமே காரணம் அல்ல.

தமிழர்கள் மட்டுமே தங்களை உயர்ந்தவர்களாக காட்டிக் கொண்டு, இரண்டு, மூன்று தலைமுறைகளாகவே தங்களது தலையில் தாங்களே மண்ணை வாரிப்போட்டுக் கொண்டவர்கள். அதற்கு, அடுத்தவர்களை மட்டுமே குறைகூறி அதனை நம்பவும் துவங்கி கனகாலம் ஆகிவிட்டது.

சுமார் நூறாண்டுகளுக்கு முன்னர் தான், குடநாடு தமிழர்கள் தங்களை நாட்டிலேயே அதிகம் படித்தவ சமுதாயத்தினர், அறிவாளிகள் அறிவு ஜீவிகள் என்றெல்லாம் காட்டிக்கொள்ள துவங்கினர். அன்றைய காலகட்டத்தில், பிழைப்பிற்காக பள்ளிகளுக்கு சென்றார்கள்

தொடர்ந்து, சிங்களவர்களுக்கு கிடைக்காத பிரித்தானிய அரசிற்கு ஊழியத்திற்கு சேவகம் செய்த சமூகம் தனது சுயகௌரவம் குறித்து மார்தட்டி, தொடை தட்டி இனப்போரில் ஈடுபட்டு அதிலும் தோல்வியே மிஞ்சியது. என்றாலும் மற்ற இனத்தவர்களை இன்னமும் மட்டம் தட்டுவது, சின்னத்தனமானது. நகைப்பிற்குரியது. அது ஒருவித யாழ் தமிழர்கள், கல்வி அறிவு பெற்று, அரசு வேலை, அதன் மூலம், மாதாந்த வருமானம் மற்றும் சமுதாயத்தில் கௌரவம் ஆகியவை, தற்செயல் நிகழ்வுகளே. சிங்கள மேல்தட்டினர் வெளியாட்களுக்கு வேலை செய்வதை கௌரவ குறைவாக நினைத்த காலகட்டத்தில், அந்த பணியை செய்வதற்கு தமிழர்கள் மட்டுமே முன்வந்தனர் என்பதும் ஒரு வாதம். திரிவுவாதம் என்று கூறசொல்லலாம்.

ஆனால், அது நாட்டையும் மக்களையும் காட்டிகொடுப்பதற்கு சமமானதே என்ற கருத்து ஒரு சாராரிடம் இன்னமும் இருக்கிறது. இந்த காலகட்டத்தில், குடநாடு வேளாளர் சமுதாயத்தை சார்ந்தவர்கள், அந்த அரசு மற்றும் ஆசிரியர் பணிகள், வேலைதேவை என்ற நிலையில் இருந்த சிங்களவர்களுக்கு கிடைக்காமல் பார்த்துக் கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டு இன்றளவும் உள்ளது.

### சொல்லப்படாத போட்டி

இதில் வெட்கக்கேடான விடயம், சிங்களவர்கள் என்று மட்டும் அல்ல. தமிழர்கள் இடையேயே, யாழ்பாண வெள்ளாளர்கள் அரசில் உயர் பதவிகளில், பிற சமுதாயத்தினருக்கு இடம் இல்லாமல் பார்த்துக்கொண்டார்கள். அதன் தாக்கம் இன்றளவும் தமிழ் சமுதாயத்தில், அதன் எண்ணவோட்டத்தில் தொடர்கிறது.

அதுபோன்றே, யாழ்பாணத்தில் படித்து சமூகத்தில் கௌரவமான பதவிகளில் அமர்ந்தவர்கள், அதே நிலைக்கு கிழக்கு வாழ் தமிழர்கள் முன்னேறிவிடாதவாறு பார்த்துக்கொண்டார்கள். இதில் கிழக்கு தமிழர்களுக்கும், வடக்குவாழ் தீவு தமிழர்களுக்கும் இடையே தங்களில் யார் அதிகமாக பின்தள்ளப்படுகிறார்கள் என்பதில், சொல்லப்படாத போட்டி வேறு.

அந்த விதத்தில், இனப்போர் உச்சத்தை அடையும் நாள்வரை, நல்லூர் கந்தனின் வருடாந்த திருவிழாவில், கரையர் சமூகத்தினரின் நாளன்று தமிழ் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட திரைப்பட குழுவினரின் நிகழ்ச்சிகளை திருட்டுத்தனமாக பார்த்து ரசித்துவிட்டு, வீட்டில் அடி வாங்கியவர்கள் உங்களில் எத்தனை பேர்? திருவிழாவிற்கு சென்று விட்டு திரும்பும் போது, வீட்டு வாசலிலேயே அவர்கள் தலைகளில் தண்ணீர் ஊற்றிய பின்னரே உள்ளே அனுமதித்த பெற்றோர்கள், உங்களில் எத்தனை பேர்?

### சீழ்பிடித்த சிரங்கு

இப்படி, உள்ளுக்குள்ளேயே சீழ் பிடித்த சிரங்கை வைத்துக்கொண்டு, சிங்களவர்களை மட்டுமே தொடர்ந்து குறை கூறிவருவது எதில் சேர்த்தி? அதற்கு பதிலுரையைதான் ஆண்டவனே கொடுத்துள்ளான். இனப்போரை ஒரு 'துன்பியல் சம்பவமாகவே' நினைத்து ஒதுக்க முடிந்தாலும் கூட, அதன் கீழே உள்ள அழுக்கு தானே மேலும் மேலும் மேலே வருகிறது. அதன் ஒரு முகம் தானே தற்போதைய தமிழ் மாணவ – மாணவியர்கள் அனுபவிக்கும் துன்பங்கள்?

இவை அனைத்துமே, பிரச்சினையே உருவான ஒரு சமுதாயத்தின் பிரச்சினை. அல்லது அதன் பிரதிபலிப்பு. அல்லது, அவற்றிலிருந்து பிறந்த புதிய பிரச்னைகள். ஏதோ, முந்தைய தலை முறையினரின் தவறுகளுக்கு, எதிர்கால தலைமுறைகளை தண்டிப்பதற்கு சமம். இதில் மட்டுமாவது, சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத்தவர்கள் என்ற பாகுபாடு இல்லை என்றே தோன்றுகிறது. ஆனால், அதிலும் இனப்பாகுபாடு, மற்றும் ஜாதி வித்தியாசங்களை புகுத்தி, அதில் குளிர்காய்வதில் நமது மக்கள் சமர்த்தர்கள்.

என்ன, நூறாண்டுகளுக்கு முன்னர், ஒன்றிரண்டு தலைமுறை தமிழர்களின் அகம்பாவம் மிக்க சமூக அணுகு முறைக்கு, அடுத்தடுத்து தலையெடுத்துள்ள தலைமுறையினர்கள் தண்டனை அனுபவித்து வருகிறார்கள். அந்த தண்டனையை, தங்களது எதிர்கால சந்ததியினருக்கும் அந்த தண்டனையை, யாருமே கேட்டு பெறாத பரம்பரை சொத்தாகவும் விட்டு செல்கிறார்கள். அது தான் கொடுமையிலும் கொடுமை.

காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.06.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 16 புதன்கிழமை 01.06.2023 கதிர் 74

## நண்பனைக் கொன்றவருக்கு தூக்கு வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு

நண்பனைக் கொன்ற குற்றவாளிக்கு வவுனியா மேல் நீதிமன்றம் இன்று தூக்குத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

சதாசிவம் குகானந்தன் 2013இல் கொலைசெய்யப்பட்டார். அவர் ஒரு முச்சக்கரவண்டிச் சாரதி. வவுனியா, தோணிக்கலைச் சேர்ந்த ஜேசுதாசன் இலங்கேஸ்வரன் என்பவரே அவரைக் கொலைசெய்தார் என்று சட்ட மா அதிபரால் குற்றஞ்சாட்டப்பட்டது. குற்றவாளியும் ஒரு முச்சக்கரவண்டிச் சாரதியாவார்.

2013 தை 28 வவுனியா, மருக்காரம்பளையில் வாழும் தமது சகாவான முச்சக்கர வண்டிச் சாரதி ஒருவரின் புதும னை புகுவிழாவுக்கு சதாசிவம் மற்றும் ஜேசுதாசன் இருவரும் சென்றிருந்தனர்.

2

## ஈ.பி.டி.பி. அமைப்பாளர் யானை தாக்கி மரணம்!



முன்னாள் அமைச்சர் எம்.சி.கனகரட்ணத்தின் புதல்வரும், ஈபிடிபி கட்சியின் திருக்கோவில் பிரதேச அமைப்பாளருமான கனகரட்ணம் கங்காதரன் இன்று அதிகாலை காட்டு யானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

தம்பிலுவில் பிரதேசத்தில் உள்ளவயலுக்கு இரவுக்காவல் கடமைக்குச் சென்றிருந்த நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இவரின் மறைவுக்கு கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் நீரியல் வள அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இரங்கல் தெரிவித்துள்ளார்.

ஓய்வுநிலை விவசாய போதனாசிரியரான கங்காதரன் கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக பொதுநல செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளார். (02)

## ஆரையம்பதி வங்கியை உடைத்து திருட நடந்த முயற்சி முறியடிப்பு

### அபாய அலறலால் தப்பியது பணப் பெட்டகம்

மட்டக்களப்பு மாவட்டம், ஆரையம்பதி நகரில் உள்ள இலங்கை வங்கிக் கிளையை உடைத்து பணத்தைத் திருட எடுத்த முயற்சி முகாமையாளரின் உடனடி நடவடிக்கை காரணமாகத் தடுக்கப்பட்டது.

இன்று அதிகாலை 3 மணியளவில் வங்கியின் பணப் பெட்டகத்தில் இருந்த வந்த அபாய எச்சரிகையை அடுத்து விரைந்து செயற்பட்ட முகாமையாளர் ஆரையம்பதி பொலிஸ்நிலையத்திற்கு நேரில் சென்று முறையிட்டார்.

முகாமையாளரையும் அழைத்துக்கொண்டு பொலிஸார் வங்கிக்குச்சென்றபோது, அங்கு வங்கியை உடைத்துபெட்டகத்திலிருந்து

2

# 14 துறைகளில் வல்லுநர்கள் வரி செலுத்தப் பதிவது இன்று முதல் கட்டாயம்

## சிறப்பு வர்த்தமானி மூலம் அரசு அறிவிப்பு




மருத்துவர்கள், பொறியாளர்கள், பட்டயக்கணக்காளர்கள், சட்டத்தரணிகள், கட்டடக் கலைஞர்கள் உள்ளிட்ட துறைசார் வல்லுநர்களும் சிறு மற்றும் நடுத்தர வர்த்த, வாணிப நிலைய உரிமையாள்களும் உள்ளடங்கலாக 14 தொழிற் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இன்று முததல் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் தம்மைப் பதிவு செய்யவது கட்டாயம் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பான சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவால் விடுக்கப்பட்டுள்ளது.

2

## யாழ். நூலகம் எரிக்கப்பட்டதன் 47ஆவது நினைவேந்தல் இன்று






யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் இனவாதிகளால் தீக்கிரையாக்கப்பட்டதன் 42ஆவது நினைவேந்தல் இன்று இடம்பெற்றது. யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஏற்பட்டில் பொதுசன நூலகத்தில் இந்த நிகழ்வு நடந்தது.

யாழ்ப்பாண பொதுசன நூலகத்தை உருவாக்கு-வதற்கு காரணகர்த்தாவாக விளங்கிய செல்லப்பாவினதும், யாழ்ப்பாண பொதுசன நூலகம் எரியூட்டப்பட்டதை அறிந்து கவலையுற்று உயிரிழந்த தாவீது அடிகளாரதும் உருவப் படங்களுக்கு தீபம் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன் தலைமையில் நடந்த நிகழ்வில் நூலக ஊழியர்களும் பொதுமக்கள் சிலரும் கலந்து கொண்டனர்.

நூலகம் எரிக்கப்பட்ட காலத்தில், அங்கு சுமார் 97,000 அரிய நூல்கள் இருந்ததுடன், பழைமையான ஓலைச் சுவடிகள், ஏடுகள் போன்ற தெற்காசியாவின் அரும்பெரும் சொத்துக்களும் இருந்தன. தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக் கலவரத்தைத் தொடர்ந்து திட்டமிட்ட காடையர் கும்பலால் நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது.

எரிக்கப்பட்டபோது இந்த நூலகமே தென்கிழக்காசியாவிலேயே மிகப்பெரிய நூலக மாகத் திகழ்ந்தது.

### 5 வருடங்களாகியும் பாவனைக்கு விடப்படாமலிருக்கும்

## வவு. பொருளாதார மைய நிலையத்தை திறப்பது குறித்து அமைச்சர் குழு ஆய்வு





கட்டி முடிக்கப்பட்டு 5 வருடங்களாகியும் மக்கள் பாவனைக்குக் கையளிக்கப் படாத வவுனியா பொருளாதார மைய நிலையத்தைத் திறப்பது தொடர்பாக கிராமியப் பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் அதிகாரிகள் குழு ஆய்வு செய்துள்ளனர்.

மூன்று முறிப்பு என்ற இடத்தில் அமைந்துள்ள இந்தப் பொருளாதார மைய நிலையத்திற்கு நேரில் வருகை தந்த இராஜாங்க அமைச்சர் மற்றும் அதிகாரிகள் அடங்கிய குழுவினர், கட்டடத்தின் தற்போதைய நிலமைகளைப் பார்வையிட்டனர்.

விவசாய அமைச்சின் மேலதிக செயலாளர், வவுனியா மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் அந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

இந்தப் பொருளாதாரமத்திய நிலையம் 291மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டது. 2018இதன் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டபோதும் இன்னும் பயன்பாட்டுக்கு விடப்படவில்லை. வவுனியாவில் மரக்கறி மொத்த விற்பனையில் ஈடுபடும் வர்த்தகர்களின் கடும் எதிர்ப்புக் காரணமாக இந்தப் பொருளாதார மத்திய நிலையம் வீணடிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கு முன்னரும் பல தடவைகள் இந்தப் பொருளாதார மத்திய நிலையத்தை திறப்பது தொடர்பாக

2

## மகாவலி அதிகார சபைக்கு தகவல்கள் வழங்கக்கூடாது

### முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தீர்மானம்

(ந.லோகதயாளன்)

மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால் புதிதாக உருவாக்க முயற்சிக்கப்படும் 'ஜே' வலயத்துக்காக அவர்களால் கேட்கப்பட்டுள்ள தகவல்களை பிரதேச செயலர்கள், மாவட்டச் செயலர்கள் வழங்கக்கூடாது என்று முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வடக்கில் வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களின் பல பகுதிகளை இணைத்து புதிதாக 'ஜே' வலயத்தை அமைப்பதற்கு ஏதுவாகத் தரவுகளைத் தரும்படி அந்தந்தப் பகுதிகளுக்கான பிரதேச செயலர்களிடம் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால் கோரப்பட்டிருந்தது. 37 கிராம அலுவலர் பிரிவுகளின் விவரங்கள் இவ்வாறு கேட்கப்பட்டிருக்கின்றன.

இந்த முயற்சி குறித்து முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்றுச் சுட்டிக்காட்டப்பட்டது. அந்த



முயற்சிக்கு கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த பலரும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இது தொடர்பில் ஜனாதிபதியுடன் நேரடியாகக் கலந்துரையாடுவதாகக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான்

2

## பொருளாதார மைய நிலைய மின்சார நிலுவை ரூ. 4 லட்சம்

### இணைப்புத் துண்டிக்கப்பட்டது

கட்டி முடிக்கப்பட்டும் மக்கள் பயன்பாட்டுக்குக் கையளிக்கப்படாத வவுனியா பொருளாதார மைய நிலையத்தின் மின்சார நிலுவைக் கட்டணம் 4 இலட்சம் செலுத்தப்படாததை அடுத்து அதன் மின் இணைப்பு மின்சார சபை அதிகாரிகளால் துண்டிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, மூன்றுமுறிப்பு பகுதியில் 291 மில்லியன் ரூபாய் செலவில் இந்தப் பொருளாதார மைய நிலையம் அமைக்கப்பட்டது. அங்கு 55 கடைத் தொகுதிகள் உள்ளன. மரக்கரி மொத்த விற்பனையில் ஈடுபடுவதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. தம்புள்ளக்கும் வடக்குக்கும் இடையிலான ஓர் நடுவண் நிலையமாகச் செயற்படும் வகையில் இது அமைக்கப்பட்டது.

இந்த நிலையத்தின் கட்டுமானப்

2

# இன, மதங்களுக்கிடையில் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் அரசியல்வாதிகளின் சுயநல சிந்தனையை தோற்கடிக்குக

## மக்களைக் கோருகிறார் அருட்தந்தை சிறில் காமினி



இனங்கள் மற்றும் மதங்களுக்கு இடையிலான ஒற்றுமையை சீர்குலைக்கும் சில அரசியல்வாதிகளின் சுயநலமான சிந்தனைகளை தோற்கடிக்க வேண்டும்.

இதற்காக நாட்டு மக்கள் அனைவரும் சுய சிந்தனையோடு செயற்படுவது அவசியம் என கொழும்பு பேராயர் இல்லத்தின் ஊடகப் பேச்சாளர் அருட் தந்தை சிறில் காமினி அடிகளார் தெரிவித்தார்.

இனங்கள் மற்றும் மதங்களுக்கிடையில் பிரச்சினைகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கு அரசாங்கம் விரைந்து செயல்பட வேண்டும்.

இது தொடர்பில் வெறும் வாய் வார்த்தைகளை மாத்திரம் கூறிக்கொண்டிருக்காமல், சட்டத்துக்கு உட்பட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கொழும்பு பேராயர் இல்லத்தில் நேற்று (புதன்கிழமை) காலை நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் –

மத நம்பிக்கை மற்றும் மத குருமார்களை நிந்திக்கும் வகையிலான கருத்துகளை வெளியிடுவதை வன்மையாக கண்டிக்கிறோம்.

குறிப்பாக சமூக ஊடகங்களில் இதுபோன்று கருத்துகளை வெளியிடும் நபர்களின் எண்ணிக்கை தற்போது பாரியளவில் அதிகரித்துள்ளமை காண முடிகிறது. இவ்வாறனவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஊடகங்களில் தெரிவிக்கப்படுகின்றன.

இனவாத, மதவாத குழப்பங்களை ஏற்படுத்தி, நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்துவதற்கு சில அரசில்வாதிகள் முயற்சிக்கிறார்கள்.

அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக அவ்வாறான அரசியல்வாதிகள், பல்வேறு நபர்களையும், அமைப்புக்களையும் கடந்த காலங்களிலும்கூட பயன்படுத்தப்பட்டிருந்தனர். அது போன்றதான ஒரு சூழ்ச்சியின் ஓர் அங்கமாகவே, தற்போது நாட்டில் ஏற்படுத்தப்பட்டுவருகிறது. அரசியல்வாதிகள் சுயநலமாக சுகபோகிகளாக வாழ்வதற்கு, மக்களை பலிகடாவாக ஆக்குவதற்கான செயற்பாடுகள் நடைபெறுகிறது. இதன் காரணமாக எமது நாடும் மக்களும் தாங்கிக் கொள்ள முடியாத இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படவுள்ளமையைக் காண முடியும்.

பௌத்த மதத்துக்கும் இந்நாட்டின் ஏனைய மதங்களுக்கும் எதிரான கருத்துக்களை வெளியிட்டவர்கள் குறித்து ஆராய்வதோடு, அவர்களுக்கு பின்புலமாக செயற்படுபவர்கள் மற்றும் அமைப்புக்கள் குறித்தும் விரிவான, நேர்மையான, நியாயமான மற்றும் சுயாதீனமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, உண்மையை வெளியிடுவது பொலிஸார் மற்றும் குற்றத் தடுப்புப் பிரிவினரின் பாரிய பொறுப்பாகும். – என்றார். (05)

## மிதக்கும் சூரியசக்தி மின்னுற்பத்தி கட்டமைப்பை உருவாக்குவதற்கான ஒப்பந்தமும் கைச்சாத்து!




இலங்கையில் முதலாவது மிதக்கும் சூரியசக்தி மின் உற்பத்தி கட்டமைப்பை உருவாக்குவதற்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. நேற்று (புதன்கிழமை) கொரியா தொழில்நுட்ப மேம்பாட்டுக்கான நிறுவனம் மற்றும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுக்கிடையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆரம்பிக்கப்படவுள்ள மிதக்கும் சூரிய மின் உற்பத்திக் கட்டமைப்புக்கான 5.2 மில்லியன் டொலர் மானியம் கொரியா தொழில்நுட்ப மேம்பாட்டுக்கான நிறுவனத்தால் நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டங்கள் கொரிய பொறியியல் நிறுவனத்தால் உருவாக்கப்படவுள்ளன. சப்ரகமுவ மாகாணத்திலுள்ள சந்திரிகா வாவி மற்றும் ஊவா மாகாணத்திலுள்ள கிரி இப்பன் வாவி ஆகியவற்றில் இவை உருவாக்கப்படவுள்ளன. 2024 டிசெம்பருக்குள் இந்தத் திட்டத்தை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுவதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். (05)



## மீற்றர் பூட்டினால் மட்டுமே ஓட்டோக்களுக்கு அனுமதி

### யாழ். மாவட்ட செயலகத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஓட்டோக்களுக்கு கட்டண மீற்றர் பொருத்தப்பட வேண்டும் எனவும் அவ்வாறு கட்டண மீற்றர் பொருத்தாத ஓட்டோக்களுக்கு ஓட்டோ தரிப்பிடங்களில் நின்று சேவையில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

குறிப்பாக கட்டண மீற்றர் பொருத்து–வதற்கான கட்டணத்தை கட்டண மீற்றர் பொருத்தும் நிறுவனத்துடன் கலந்தாலோசித்து ஓட்டோ உரிமையாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் அதனைப் பொருத்துவதற்குரிய ஏற்பாடுகளை செய்யுமாறும், கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப் பட்டது. (05)

### நண்பனைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அன்றிரவு நடந்த விருந்துபசாரத்திலும் கலந்துகொண்டனர். அப்போது இருக்குக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டு அது கைகலப்பில் முடிந்தது. அதன் பின்னர் அவரவர் தத்தம் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர். மறுநாள், தை 29 காலை 7 மணியளவில் வவுனியா இலங்கை வங்கியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் தொடருந்துக் கடவையில் சதாசிவம் கொல்லப்பட்டுக்கிடந்தார். அருகிலேயே நின்றிருந்த முச்சக்கரவண்டியில் இரத்தக்கறை காணப்பட்டது. விசாரணை நடத்திய பொலிஸார் கொலை நடந்த அன்று புதுமனைப் புகுவிழாவில் கைகலப்பில் ஈடுபட்ட மற்றைய இரு முச்சக்கரவண்டிச் சாரதிகளையும் சந்தேகநபர்களாகக் கைது செய்து விசாரணை நடத்தினர்.

பூர்வாங்க விசாரணைகளின் முடிவில் 2018 நவம்பர் 7 சட்ட மா அதிபரால் முதலாம் எதிரியாக ஜேசுதாசன் இலங்கேஸ்வரன் மீதும் மற்றைய இரண்டாவது எதிரி மீதும் வவுனியா மேல் நீதிமன்றத்தில் சட்ட மா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அரச சட்டவாதியான தர்சிகா திருக்குமரநாதன் அதனை நெறிப்படுத்தினார்.

நான்கரை வருடங்களாக நடந்த வழக்கு விசாரணையின் முடிவில் இன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. சந்தர்ப்பம், சூழ்நிலை, சாட்சியங்கள் மூலம் முதலாம் எதிரியான பொதுக் கிணறு வீதி, தோணிக்கல்லைச் சேர்ந்த ஜேசுதாசன் இலங்கேஸ்வரன் தான் கொலையை நிகழ்த்திய குற்றவாளி என்று நீதிபதி மா. இளஞ்செழியன் தீர்ப்பளித்தார். இந்தக் குற்றத்துக்காக அவருக்குத் தூக்குத் தண்டனையும் விதித்தார். இரண்டாம் எதிரிக்குக் கொலையுடன் தொடர்புகள் ஏதும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டு அவர் விடுவிக்கப்பட்டார். (100)

### வவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆய்வுகள் நடத்தப்பபட்டன. அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் வருகை தந்து பார்வையிட்டுள்ளனர். எனி னும் நிலையம் இன்னும் திறக்கப்படவில்லை.

நிலையத்தை நேரில் பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இராஜங்க அமைச்சர், பொருளாதார மைய நிலையத்தை உடனடியாகத் திறப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றார். அமைச்சில் இருந்து அதிகாரிகள் வருகை தந்து இதனை திறப்பதற்கான வேலைகளை முன்னெடுத்துள்ளனர். நிலையத்தைத் திறப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளைப் பெறவேண்டியுள்ளது. எனக்கு இந்த அமைச்சு கிடைத்தமையால் அதன் ஊடாக பொருளாதார மத்திய நிலையங்களை திறக்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

நான் அமைச்சராக வந்த பின் இந்தப் பொருளாதார மத்திய நிலையத்திற்கு இரண்டு தடவை வந்து சென்றுள்ளேன். இதனைத் திறப்பதற்கு உள்ள தடைகளைக் களைவது குறித்து மொத்த வியாபாரிகளுடன் பேசியுள்ளோம். தற்போது மொத்த மரக்கறி விற்பனை நிலையம் உள்ள இடம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானது.

அதில் ஒரு கடைத் தொகுதி அமைக்கப்படவுள்ளது. அதில் மொத்த மரக்கறி விற்பனையாளர்கள் தங்களுக்கும் வர்த்தக நிலையங்களைக் கோரியுள்ளனர். அது தொடர்பில் சாதமாகப் பேசியுள்ளோம்.

பொருளாதார மத்திய நிலைய கடைகளுக்கு மேலதிகமாக அந்த கடைத் தொகுதிக்கு ஏற்படும் செலவையும் தந்தால் அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அங்கும் கடைகளை வழங்கலாம் என்று பேசியுள்ளோம் – எனத் தெரிவித்தார். (100)

### பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிகள் நிறைவடைந்து 5 வருடங்களாகிவிட்டபோதும் இன்னும் திறக்கப்படவில்லை. வவுனியா மரக்கறி மொத்த வியாபாரிகள் காட்டும் கடும் எதிர்ப்புக் காரணமாகவே இது திறக்கப்படாமலுள்ளது என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இருப்பினும் அதன் மின்சாரக் கட்டணம் 4 லட்சம் ரூபாவைத் தாண்டியுள்ளது. அந்தத் தொகையை யார் செலுத்துவது என்று தெரியாத நிலையில், அதன் மின் இணைப்பை மின்சார சபை அதிகாரிகள் துண்டிதுள்ளனர். இதனால் அங்கு காவல் கடமையில் இருப்பவர்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

நிலையமானது மக்கள் பயன்பாட்டுக்குத் திறக்கப்படாதபோதும் கொவிட் பெருந்தொற்றுக் காலப்பகுதியில் அது சிகிச்சை நிலையமாகச் சில மாதங்கள் இயங்கி வந்தது. மின்சாரக் கட்டணம் இவ்வளவு உயர்வதற்கு அதுவும் ஒரு காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

"இந்தப் பொருளாதார மைய நிலையத்தைத் திறப்பதற்கு முன் மின்கட்டண நிலுவை செலுத்தப்பட்டு, மின்சார இணைப்பு மீளப் பெறப்படும்" என்று கிராமியப் பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார். (100)

### மகாவலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன், வினோநோகராதலிங்கம், கு.திலீபன், ரிசாத் பதியுதீன் ஆகியோர் உறுதியளித்தனர்.

ஜனாதிபதியுடன் இதுதொடர்பில் பேசி ஒரு உறுதியான தீர்வை எட்டும் வரைக்கும் அதிகார சபை கோரும் எந்தவொரு தரவினையும் எந்தப் பிரதேச செயலாளரும் வழங்கக்கூடாது என்று கூட்டத்தில் ஏகமானதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பிரதேச செயலர்கள் தகவல்களை வழங்காமல் இருப்பதை மாவட்டச் செயலர் உறுதி செய்யவேண்டும் எனவும் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டது.

இதேபோன்று, இதற்கு முன்னதாக மகாவலியின் 'எல்' வலயத்துக்கு முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகள் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினால் கையகப்படுத்தப்பட்டன. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஏற்கனவே ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இந்த 'எல்' வலயத்துக்குள் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 34 கிராம அலுவலர் பிரிவுகள் உள்வாங்கப்பட்டன. தமது பகுதிகள் அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் செல்வதை அந்தப் பகுதி மக்கள் கடுமையாக எதிர்த்த காரணத்தால் அந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

### ஆரையம்பதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணத்தைத் திருட எடுக்கப்பட்ட முயற்சி தெரிய வந்தது.

வங்கியின் வெளிக் கதவை உடைத்து நுழைந்த திருடர்கள், பணப் பாதுகாப்புப் பெட்டகம் (லொக்கர்) வைக்கப்பட்டிருக்கும் அறையையும் உடைத்து அங்கிருந்த பெட்டகத்தையும் உடைக்க முயற்சி செய்துள்ளனர்.

பெட்டகத்தில் இருந்த அபாய அலறல் சமிக்ஞைக் கருவி உடனடியாக முகாமையாளரின் அலைபேசிக்கு அபாய அலறலை அனுப்பி வைத்தது. அதைப் பார்த்து உடனடியாகச் சுதாகரித்துக்கொண்ட வங்கி முகாமையாளர் உடனடியாகவே காத்தான்குடிப் பொலிஸ் நிலையம் சென்று முறையிட்டுள்ளார்.

பொலிஸாரும் முகாமையாளரும் வங்கிக்கு வந்து சேர்ந்தபோது திருடர்கள் தப்பியோடிவிட்டனர். காலையில் தடயவியல் பொலிஸார் மோப்ப நாயின் உதவியுடன் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் எனினும் எவரும் உடனடியாகக் கைது செய்யப்படவில்லை.

### 14 தொழில்...

புதிய வர்த்தமானி அறிவிப்பின்படி, ஊழியர் சேம லாப நிதிக்கு ஊழியர் மற்றும் முதலாளி இருவரிடமிருந்தும் மாதாந்தம் ரூ. 20,000 செலுத்தும் தனியார் துறைப் பணியாளர்களும் இவ்வாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்வது கட்டாயம்.

அறிவிக்கப்பட்டுள்ள 14 பிரிவு வல்லுநர்களின் விவரம் வருமாறு:

1. இலங்கை மருத்துவச் சபையில் (ஸ்ரீலங்காவில்) பதிவு செய்துள்ளவர்கள்.
2. இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர்கள்
3. இலங்கையின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர்கள்
4. இன்ஸ்டிடியூட் ஆஃப் இன்ஜினியர்ஸ் இலங்கையின் உறுப்பினர்கள்
5. தொழில்முறை வங்கியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள்
6. இலங்கை கட்டடக்கலை நிறுவகத்தின் உறுப்பினர்கள்
7. இன்ஸ்டிடியூட் ஆஃப் க்வாண்டிட்டி சர்வேயர்ஸ் (கட்டட வடிவமைப்பாளர்) சிறீலங்காவின் உறுப்பினர்கள்
8. இலங்கை உயர்நீதிமன்ற சட்டத்தரணிகள்
9. பிரதேச செயலகங்களில் தமது தொழில்களைப் பதிவு செய்தவர்கள்
10. மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களை (முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் லான்ட் மாஸ்டர் தவிர) வைத்திருக்கும் நபர்கள்
11. ஏப்ரல் 01, 2018 அன்று அல்லது அதற்குப் பிறகு இலங்கையில் ஏதேனும் அசையாச் சொத்தை பத்திரப் பரிமாற்றத்தின் மூலம் வாங்கிய அல்லது பெற்ற நபர்கள்
12. ஊழியர் மற்றும் முதலாளி இருவரிடமிருந்தும் ஏதேனும் வருங்கால வைப்பு நிதிக்கு மாதாந்திர பங்களிப்பு ரூ. 20,000 செலுத்துபவர்கள்.
13. உள்ளூர் அதிகாரசபையிடமிருந்து கட்டடத் அமைப்பதற்கான அனுமதியைப் பெறும் எந்தவொரு தனிநபரும்
14. இவை தவிர்ந்த எந்தவொரு துறைசார்ந்த தனிநபரும் மாதாந்தம் ஒரு லட்சம் ரூபா அல்லது ஆண்டுக்கு 12 லட்சம் ரூபா வருமானத்தைப் பொறுவாராயின் அவரும்.

உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தில் பதிவு செய்வது இன்று முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

## 10 ஆயிரம் ரூபா லஞ்சம் கான்ஸ்டபிள் கைது! வெலிகமவில் சம்பவம்

*வெலிகம பொலிஸில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவால் நேற்று (புதன்கிழமை) கைது செய்யப்பட்டார்.*

*குறித்த கான்ஸ்டபிள் ஒருவரிடம் 10 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாகக் கோரிய நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டார் என இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (05)*

# பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள ஜனாதிபதியின் ஜப்பான் விஜயம் உதவி

## பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவிப்பு



ஜப்பான் விஜயத்தின் போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது வெளிவிவகார மற்றும் பொருளாதார கொள்கைகளை உலகிற்கு தெளிவாக எடுத்துரைத்திருப்பது, பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு பெரும் உந்துசக்தியாக அமைந்துள்ளது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இலகு ரயில் திட்டத்தை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கும் இந்நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஜப்பானின் ஆதரவை மேலும் அதிகரித்துக் கொள்வதற்கும் ஜப்பானிய பிரதமருடனான கலந்துரையாடலில் ஜனாதிபதி மேற்கொண்ட தலையீடானது ஒரு மேம்பட்ட இராஜதந்திர அணுகுமுறை என்றும் அவர் வலியுறுத்தினார்.

நாட்டில் அபிவிருத்தித் திட்டங்கள் மற் றும் வெளிநாட்டு முதலீடுகளை மேம்படுத்துவதற்காக உயர்மட்ட வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் வர்த்தக சபைகளுடன் கலந்துரையாடலின் போது ஜனாதிபதியின் வெளிப்படையான கருத்துக்கள் நாட்டின் நற்பெயரை உயர்த்த உதவியது என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் தயாரிக்கப்படும் '101 கதா' நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு வின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க இதனைக் குறிப்பிட்டார்.

ஜப்பானில் நடைபெற்ற ஆசியாவின் எதிர்காலம் தொடர்பான 28 ஆவது நிக்கெய் சர்வதேச மாநாட்டில் ஜனாதிபதியின் உரை குறித்து கருத்து தெரிவித்த சிரேஷ்ட பேராசிரியர், "ஆசியா, உலகின் எதிர்காலமாக மாறியுள்ளது'' எனவும், உலக அரசியலில் சுதந்திரமான ஆசியா உருவாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கருத்துக்கள் ஜப்பான் உள்ளிட்ட பிராந்திய வல்லரசுகளால் பாராட்டைப் பெற்றுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் கருத்துத் தெரிவித்த சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க –

"ஒரு முதிர்ந்த அரசியல்வாதி மற்றும் இராஜதந்திரி என்ற வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உலகில் உள்ள அனைத்து குழுக்களையும் சமமான முறையில் கையாள்கிறார். தொலைநோக்குப் பார்வையுடன் பணியாற்றுகிறார். எனவே, கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட தொலைநோக்கற்ற தீர்மானங்களை சீர்செய்ய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார். இலகுரக ரயில் திட்டம் கைவிடப் பட்டமையே ஜப்பானுடன் ஓரளவு விரிசல் ஏற்பட காரணமாக அமைந்தது. இந்த விடயத்தை, தம்மை புறக்கணிப்பதாகவோ அல்லது சிறுமைப்படுத்துவதாகவோ தான் ஜப்பான் கருதியது. என் கருத்துப்படி, அந்த திட்டம் உண்மையில் நம் நாட்டிற்கு உகந்த விடயமாகும்.

ஒரு நாடு துரிதமாக வளர்ச்சியடைய வேண்டுமானால், நகர்ப்புற நெரிசலான பகுதிகளில் உள்ள நெரிசலை நீக்க வேண்டும். இல்லையெனில், ஒரு நாட்டை அபிவிருத்தி செய்வது கடினம். நமது வலயத்தில் உள்ள தாய்லாந்து, வேகமாக வளர்ச்சியை நோக்கி நகர்கிற அதேவேளை வீதிக் கட்டமைப்பை உரிய வகையில் தயார்செய்து வருகிறது.

ஜப்பானின் இலகுரக ரயில் திட்டத்தை முன்னெடுத்திருந்தால், அது நம் நாட்டுக்கு சிறந்த ஒன்றாக அமைந்திருக்கும். ஆனால் கடந்த காலத்தில் எடுத்த முட்டாள்தனமான முடிவால் அந்த வாய்ப்பை இழந்தோம். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இது தொடர்பில் வருத்தம் தெரிவித்துள்ளார். அந்த நிலையில் ஜப்பானுடன் தனக்கு ஏதேனும் தவறான புரிதல் இருந்தால் அதனை மாற்றிக் கொண்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் சுமார் மூன்று பில்லியன் அமெரிக்க டாலர்களை கடன் மறுசீரமைப்பிற்கு வழங்கியது. இந்த இலகுரக ரயில் திட்டத்தில் ஜப்பான் சுமார் இரண்டு பில்லியன் டாலர்களை முதலீடு செய்ய எதிர்பார்த்திருந்தது. இந்த முதலீடு கடனாக இருந்தாலும், அதை மானியமாகவும் எண்ணலாம். இது மிகக் குறைந்த வட்டியில் கிடைத்த சிறந்த முதலீடு. பொதுவாக ஜப்பானியர்களின் உதவிகள் ஒரு நாட்டிற்கு வந்தால், அந்த நாட்டின் மீது முழு உலகத்தின் கவனமும் திரும்பும். ஜப்பானிய திட்டங்கள் கொத்துக்கள் போன்று தான் வருகின்றன. முதலீடுகள் குவிந்து வரும். அத்துடன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஜப்பான் விஜயம் காரணமாக நம்நாட்டுக்கு இரண்டு பில்லியன் டொலர்கள் முதலீட்டு உதவிகள் கிடைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனை நமது நாட்டின் பொருளாதார மறுமலர்ச்சிக்கான நல்ல வாய்ப்பாகக் குறிப்பிடலாம்.

எதிர்காலத்தில் இரு தரப்பினரின் இணக்கப்பாட்டின்றி வெளிநாட்டு திட்டங்களை நிறுத்த முடியாத வகையில் சட்டமூலமொன்றை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப் போவதாக ஜனாதிபதி கருத்து வெளியிட்டுள்ளார். முதலீடுகளின் பலனை நாடு அடைய வேண்டுமானால், அத்தகைய கருத்து சட்டமாக்கப்படுவது மிகவும் முக்கியமானது. முதலீடுகளுக்கு அழைப்பு விடுக்கும் நாடு என்ற வகையில் ஏனைய நாடுகளிலிருந்து முதலீடுகள் வரும்போது இவ்வாறான சட்டம் மிகவும் முக்கியமானது. நகர் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வாக, 'இலகுரக ரயில் திட்டம்' ஆரம்பிக்கப்பட்டது. தற்போதைய சூழ்நிலையில், இலகுரக ரயில் பாதை அமைப்பது மிகவும் முக்கியமானது.

அந்த மாநாட்டில் எமது பிரதேச நண்பர்களுடன் கருத்துக்களை பரிமாறிக்கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. இது எமது நாட்டுக்கு கிடைத்த நல்ல சந்தர்ப்பமாகும். அந்த மாநாட்டில் ஜனாதிபதி வரவேற்கத்தக்க உரையென்றை நிகழ்த்தினார். ஜப்பான் உயர் மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி, ஆசியா உலகின் எதிர்காலம் என்பதை விளக்குகிறார். முக்கியமானது என்னவென்றால், நாட்டின் தலைவர் ஒருவர் தனது வெளியுறவுக் கொள்கையை சரியான முறையில் உலகிற்கு முன்வைக்கிறார். அணிசேராக் கொள்கையை அவர் தெளிவாகக் கூறினார். யாருடைய பக்கமும் சாய வேண்டிய அவசியம் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

ஜப்பான் மற்றும் பிராந்திய நாடுகளிடையே இது பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இதை நம் நாட்டின் பெருமையாகவும், வெற்றியாகவும் குறிப்பிடலாம். நெருக்கடிக்குப் பிறகு உலகை சந்திக்கும் வாய்ப்பாகவும் இந்த வாய்ப்பைக் குறிப்பிடலாம். மேலும் சார்ளஸ் மன்னரின் முடிசூட்டு விழாவிற்கும் ஜனாதிபதி சென்றார். இவற்றின் ஊடாக எமது சர்வதேச பார்வையை மீளக் கட்டியெழுப்புவதற்கான நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களை நாட்டுக்கு திறம்பட பயன்படுத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் முடிந்துள்ளது. அதை மிகச் சிறந்த அணுகுமுறையாகக் குறிப்பிடலாம்.

ஆசியாவின் பாதுகாப்பிற்கு இன்றியமையாத நாடாக இலங்கையைக் குறிப்பிடலாம். நமது டிஜிற்றல் பொருளாதாரம், போக்குவரத்து, துறைமுக நகரம் உள்ளிட்ட முதலீடுகள், முதலீட்டாளர்களுக்கு மிகவும் முக்கியமானவை. டிஜிற்றல் பொருளாதாரத்திற்கு செல்லவில்லை என்றால், ஒரு நாடாக முன்னேற முடியாது. ஜப்பான் எங்களுடன் கைலாகு கொடுத்து முன்னேற விரும்புகிறது. இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்ததைவிட இப்போது அனைத்தும் சீராகி வருவதைக் காணலாம். எதிர்காலத்தில் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதன் மூலம் நமது நாடு பய னடையும். நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களை பராமரிப்பதில் எந்த பயனும் இல்லை. ஜப்பான் ஒரு நாட்டிற்கு கடன் அல்லது உதவி வழங்கினால், அது கவனமாக வழங் கப்படுகிறது.

ஜப்பானின் தொழில்நுட்பம், நிதி மற்றும் வெளிவிவகார அமைச்சர்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடினார். அவர்கள் இலங்கைக்கு உதவ விரும்புகிறார்கள். எதிர்காலத்தில், ஜப்பானுடன் நெருக்கமாகப் பணியாற்றும் வாய்ப்பு கிடைக்கும். எம்மாலும் ஜப்பான் போன்ற நாடாக மாறலாம். – என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார். (05)

# ஊடகவியலாளர் நடேசன் அச்சுறுத்தப்பட்டு 3 வருடங்களின் பின்பே படுகொலையானார்!

## அரியநேத்திரன் சுட்டிக்காட்டு



படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐ.நடேசன் 2021 ஆம் ஆண்டு அச்சுறுத்தப்பட்டார் என சர்வதேச ஊடக அமைப்பு ஒன்றில் முறைப்பாடு செய்யப்பட்டு சரியாக 3 வருடங்களின் பின்னர் அவர் படுகொலை செய்யப்பட்டார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டக்களப்பு மாவட்ட தொழில்சார் ஊடக சங்கம் மட்டு ஊடக அமையம் இணைந்து படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன் 19 ஆண்டு நினைவேந்தல் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைக்கப்பட்டிருக்கும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுதூபியில் நேற்று (புதன்கிழமை) ஊடகவியலாளர்கள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேந்திரன் மற்றும் அருட்தந்தை சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டு அன்னாரது உருவப்படத்திற்கு மலர்மாலை அணிந்து சுடர் ஏற்றி 2 நிமிட அஞ்சலி செலுத்தினர்.

இதன்போதே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

விடுதலைப்புலிகள் பிரிந்ததற்கு பின்னர் முதலாவதாக வேட்டுவைக்கப்பட்ட ஊடகவியலாளர் நடேசன் என பார்கின்றோம். 22 வருடங்களாக வீரகேசரி பத்திரிகையின் ஊடகவியலாளராக கடமையாற்றி வந்த அவரை இழந்திருக்கின்றோம்.

2000 ஆயிரம் ஆண்டு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை உருவாக்குவதற்காக அவர் பாடுபட்டதன் காரணமாக 2001 ஆம் ஆண்டு வெற்றியளித்தது.

இருந்தபோதும் 2009 விடுதலைப் புலிகள் போராட்டம் மௌனித்ததற்கு பிற்பாடு இன்று நாங்கள் பார்க்கின்றபோது ஒரு தலைவரை ஒற்றைக் கதிரையில் பார்த்த நாங்கள் இப்போது 10 தலைவர்களை 10 கதிரையில் இன்று பார்க்கின்றதுடன் யார் தலைவர் என யாருக்கும் தெரியாத நிலையில் தமிழ்த் தேசிய அரசியல் 19 வருடம் சென்று கொண்டிருக்கின்றது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எமது விடுதலைப் போராட்டத்துக்காக பல்வேறு தரப்பினர் போராடினாலும் கூட ஊடகவியலாளர்கள் பேனா முனையில் போராடியதன் நிமிர்த்தமாக பேரினவாதம் திட்டமிட்டு 46 ஊடகவியலாளர்களைப் படுகொலை செய்துள்ளது.

பிரேமதாஸா தொடக்கம் இப்போது உள்ள ஜனாதிபதி வரையில் ஜனாதிபதிகள் மாறியிருக்கலாம் ஆட்சி மாறியிருக்கலாம்.

ஆனால் இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி இதுவரை கிடைக்காத சூழ்நிலையில் இந்த 19 ஆவது நினைவேந்தலைச் செய்து கொண்டிருக்கின்றோம்.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் நீதி வழங்க மாட்டார்கள.; எனவே சர்வதேச மட் டத்தில் நீதி கிடைக்க வேண்டும் எனக் கூறிவருகின்றோம்.

வடக்கு, கிழக்கில் பல ஊடகவியலாளர்கள் துணிந்து பலவிடயங்களை வெளிக் கொண்டுவந்தாலும் கூட அவர்களுக்கும் அச்சுறுத்தல் இருந்து கொண்டிருக்கின்றதுடன் பல ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு செல்லலாம் என்ற அச்சுறுத்தலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஆகவே, சமாதானம் என்று சொல்லுகின்றவர்கள் நாட்டில் யுத்தமில்லை என்று சொல்லுபவர்கள் எல்லோரும் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். யுத்தம் மௌனித்தாலும் கூட தமிழ் மக்களுக்கான நீதியான நியாயமான ஒரு தீர்வு வரும் வரை நாங்கள் அச்சுறுத்தப்பட்ட ஓர் இனமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

எனவே, தமிழ் மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய ஒரு சூழல் வேண்டுமாக இருந்தால் சர்வதேச சமூகம் இதனைக் கணக்கில் எடுத்து வடக்கு, கிழக்கு இணைந்து சயநிர்ணய உரிமையிலான ஓர் அரசியல் தீர்வு கிடைக்க இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். - என்றார். (05

## உத்தியோகபூர்வ இல்லத்தில்

# தூக்கில் தொங்கிய நிலையில் நீர்கொழும்பு பிரதேச செயலாளர்

நீர்கொழும்பு பிரதேச செயலாளர் தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் மர்மமான முறையில் உயிரிழந்து காணப்பட்டார்.

அயேஷ் பெரேரா என்ற 42 வயதுடைய திருமணமான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று (புதன்கிழமை) காலை அவசர தேவைக்காக ஊழியர் ஒருவர், பிரதேச செயலரின் இல்லத்துக்குச் சென்றபோது அறையில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். இந்நிலையில், குறித்த மரணம் கொலையா அல்லது தற்கொலையா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பிடியாணை இருந்தும் 2 வருடங்களாக தலைமறைவான சந்தேகநபர் கைது

## பொலிஸாரை கத்தியால் தாக்கி தப்பிக்க முயன்றபோது



நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு கடந்த இரண்டு வருடங்களாக பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பித்து தலைமறைவாகியிருந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தேடப்படும் குற்றவாளியான வெடிக்கார தொரயலகே விக்டர் விஜேதுங்க கடந்த இரண்டு வருடங்களாக பொலிஸாரிடம் இருந்து தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், அவர் கேகாலை பெலிகல, போதவல பிரதேசத்திலுள்ள தனது சொந்த ஊருக்கு திரும்பியுள்ளார் எனக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து அவரை கைது செய்ய பொலிஸார் செவ்வாய்க் கிழமை விசேட சுற்றிவளைப்பினை மேற்கொண்டனர்.

இந்த நடவடிக்கையின் போது சந்தேகநபர் ஒரு பொலிஸ் சார்ஜன்ட் மீது கத்திக்குத்துத் தாக்குதல் நடத்தியதுடன், தாக்குதலைத் தடுக்க முயன்ற பொலிஸ் கான்ஸ்டபிளும் காயமடைந்துள்ளார். இருப்பினும் சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் பெலிகல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், பொலிஸ் சார்ஜன்ட் மேலதிக சிகிச்சைக்காக கேகாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். சந்தேக நபரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கேகாலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# 14 வயது நிரம்பிய பாடசாலை மாணவிக்கு ஆபாசப்படங்கள் அனுப்பிய ஆசிரியர் கைது!

தம்புத்தேகமவில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் 14 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவருக்கு ஆபாசப் படங்கள் மற்றும் செய்திகளை அனுப்பிய குற்றச்சாட்டில் அதே பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த மாணவியின் பெற்றோர் நன்னடத்தை அலுவலகத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து செவ்வாய்க்கிழமை சந்தேகத்தின் பேரில் ஆசிரியரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தம்புத்தேகம பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதான மேற்படி ஆசிரியர் நேற்று (புதன்கிழமை) தம்புத்தேகம நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பாவமன்னிப்பும் கிடையாத குற்றம்

ஈழத் தமிழர்களின் மனங்களில் அழியா வடுவை ஏற்படுத்தி 30 வருட கால நீண்ட வன்முறைக்கு வித்திட்ட ஒரு நாள் இன்று. 1981 இதே நாளில் பௌத்த சிங்களப் பேரினவாதக் கருத்தியலால் கபளீகரம் செய்யப்பட்டிருந்த சில அரசியல்வாதிகளின் நேரடி நெறிப்படுத்தலின் கீழ் தமிழ் இனத்தின் மீதான பண்பாட்டு அழிப்புத் திட்டமிட்டு நிறைவேற்றப்பட்ட நாள்.

யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிக்கப்பட்ட நாள். இந்த வன்முறையில் நூலகம் மட்டும் எரிக்கப்படவில்லை. யாழ். நகரில் இருந்த கடைகள், சந்தை, ஈழநாடு பத்திரிகை அலுவலகம், வீடுகள், வாகனங்கள், தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகம் என்றும் வன்முறைக் கும்பலால் எரிக்கப்பட்டவைகள் பலவுண்டு. என்றாலும் பொது நூலகத்தை அழித்தத்தைத்தான் தமிழர்களால் என்றும் மன்னிக்கவோ மறக்கவோ முடியாது. அதனால்தான் 81ஆம் ஆண்டு வன்முறைகளைக்கூட நினைவேந்தாத தமிழர்கள் பொது நூலக எரிப்பை நினைவேந்தத் தவறுவதில்லை. அது தமிழர் வரலாற்றில் மன்னிக்க முடியாத மாபெரும் குற்றம்.

வைகாசி 31ஆம் நாள் தொடங்கிய இந்த வன்முறைகள் சுமார்ஒருவாரகாலம்தொடர்ந்தன. அதில் 7 அப்பாவிப்பொதுமக்களும் கொல்லப்பட்டனர். இன்று அவர்கள் யாரென்றே தெரியாது. அவர்களை யாரும் நினைவில்கொள்வதில்லை. எரிக்கப்பட்ட கடைகள், சொத்துக்களுக்காகவும் யாரும் இன்று கவலை கொள்வதில்லை. ஏனெனில் உயிர்களைத் தவிர மற்றெல்லாவற்றையும் ஏதோ ஒரு வழியில் மீட்டெடுக்க முடிந்திருக்கிறது. ஆனால், நூலகத்தை இன்றல்ல இனி என்னெற்றைக்குமேமீட்டெடுக்கமுடியாது. அதன்கட்டங்களைச் சீரமைக்கலாம். அவற்றுக்கு வெள்ளையடிக்கலாம். ஆனால் உள்ளே எரிந்து சாம்பராகிப்போய் காற்றில் கரைந்திருக்கும் பொக்கிசங்களை யாரால் மீட்டெடுக்க முடியும்?

நூலகம் எரிக்கப்பட்டபோது அதில் 97 ஆயிரம் நூல்கள், சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள், பத்திரிகைகள் என்று ஏராளம் பொக்கிசங்கள் இருந்தன. அவற்றில் பலவற்றுக்கு வேறு பிரதிகளே கிடையாது. அத்தகைய கிடைத்தற்கரிய சேமிப்புடன் தெற்காசியாவிலேயே மிகப் பெரிய நூலகமாகத் திகழ்ந்ததை ஒரு சில மணி நேரங்களில் எரித்துச் சிதைத்தனர். 1981 ஆனி 4ஆம் நாள் மாவட்ட சபைத் தேர்தல் நடக்க இருந்த நிலையில், நாச்சிமார் கோயிலடியில் நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் பரப்புரைக் கூட்டத்திற்குப் பாதுகாப்புக்காக நின்றிருந்த இரு காவல்துறையினர் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்தே இந்த வன்முறைகள் உருவாகின என்று காரணம் சொல்லப்பட்டாலும், அதற்கு முன்னரே வெளி மாவட்டங்களில் இருந்து காவல்துறையினரும் படையினரும் யாழ்ப்பாணத்திற்குத் தருவிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் சீருடையிலும் சீருடையில்லாமலும் இந்தப் படுபாதகச் செயல்களில் ஈடுபட்டார்கள் என்ற உண்மைக்குச் சாட்சியங்கள் பலவுண்டு.

இன்று முள்ளிவாய்க்காலில் உலகமே சாட்சியாக இருக்கப் படுகொலைகளை நிகழ்த்தியவர்கள் அதனையே தாங்கள் செய்யவில்லை என்று மறுக்கும்போது அன்று அதனைச் செய்ததை ஏற்றுக்கொள்ளவா போகிறார்கள். அவர்கள் மறுத்தாலும் அது கொழும்பில் ஆட்சியில் இருந்த அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ஜே.ஆர். ஜெவர்த்தனவின் ஆசியுடன் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட நடவடிக்கை என்பது உலகத்திற்கே தெரியும். இருந்தும் இன்றுவரையில் அதற்கான நீதி வழங்கப்படவில்லை.

அன்று தொடங்கிய அடக்குமுறையும் படுகொலைகளும் கடந்த 40 ஆண்டுகளில் தொடர்ந்தும் பெருகி வந்திருக்கிறதே தவிர குறையவில்லை. முள்ளிவாய்க்காலில் அது உச்சம் தொட்டு நின்றது. இன்றும் பண்பாட்டு அழிப்பாக, பௌத்த ஆக்கிரமிப்பாகத் தொடர்கின்றது. தீர்வு மறுக்கப்படுகின்றது. இனஅழிப்புசிறிதுசிறிதாகத்திட்டமிட்டுத்தொடர்ந்துகொண்டே இருக்கின்றது.

அதனால்தான் இன்றல்லதமிழர்கள்இருக்கும்வரையிலும் இந்த வடு மாறாது. நினைவுகளில் அழியாது. இதைச் செய்த பாதகர்களுக்குப் பாவமன்னிப்பும் கிடையாது.

# 50 கிலோ யூரியா உரமூடை விலை 9 ஆயிரம் ரூபாவாகக் குறைகிறது

## விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தகவல்



அரசாங்கத்துக்குச் சொந்தமான இரண்டு உர நிறுவனங்களால் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படும் 50 கிலோ யூரியா உர மூடை ஒன்றின் விலை 9 ஆயிரம் ரூபாவாகக் குறைக்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். இந்த விலைக் குறைப்பு ஜூன் 15 முதல் அமுலுக்கு வருகிறது.

யூரியா உரத்தின் விலையைக் குறைப்பது தொடர்பில் நேற்று (புதன் கிழமை) இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

31,500 மெற்றிக் தொன் யூரியா உரம் கொண்ட உரக் கப்பல் ஒன்று ஜூன் மாதம் ஆரம்ப பகுதியில் இலங்கைக்கு வரவுள்ளது.

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு மற்றும் உலக சந்தையில் யூரியா உரத்தின் விலை குறைவடைந்துள்ளமை போன்றவற்றின் அனுகூலத்தை விவசாயிகளுக்கு வழங்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். (05)

# இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைத் தடுக்க யாழ். மாவட்ட எம்.பிக்கள் ஒன்றிணையவேண்டும்

## கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் கோரிக்கை



இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைத் தடுக்க யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து பேச்சில் ஈடுபட வேண்டும் என யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடற்தொழில் அமைச்சரும் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றது.

இதன்போது கடற்தொழிலாளர் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டபோதே இந்த விடயம் முன்வைக்கப்பட்டது.

குறிப்பாகக் கூட்டத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடற்தொழில் அமைச்சராக நீங்கள் இருக்கின்ற போதும் இந்தப் பிரச்சினை தீர்கமுடியாது உள்ளது. இதனைத் தீர்க முடியாதா இல்லை இப்படியே இழுத்தடிப்பு செய்வதா எனவும் இந்திய மீனவர்களின் தற்போதைய நிலை எவ்வாறு உள்ளது ஏதற்காக கடற்படையினர் இருக்கிறார்கள் அவர்களால் இதனை தடுக்கமுடியாதா இந்திய மீனவர்களின் அத்து மிறிய செயற்பாட்டால் உள்ளூர் மினவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது மட்டுமன்றி இந்திய மீனவர்களின் வருகையால் போதைப்பெருள் வர்தகமும் கடத்தலும் இடம்பெறுகிறது இதனைத் தடுக்க வேண்டும் எனக் கோரப்பட்டது.

இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நானும் பலதடவைகள் குறிப்பாக 2004 ஆண்டு முதல் இரு தரப்பு பேச்சுகளில் பலதடவைகள் பல தரப்பினர்களுடன் பேசிவருகிறோம் ஆனாலும் முடிவுகள் எடுக்கப்படவில்லை உள்ளூர் மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை ஏற்றுக்கெள்ளலாம். இந்திய மீனவர்கள் தமது எல்லை தாண்டலைக் கைவிடுவதாக இல்லை பேச்சுகள் இடம்பெறுகின்ற போது கால அவகாசத்தை இந்தியமீனவர்கள் கேட்கிறார்கள் ஒருவருடம் இருவருடம் எனக் கேட்கிறார்கள் எனினும் அத்து மிறல்கள் நிறுத்திய பாடில்லை.

கொள்ளையர்கள் போல் வருகிறார்கள். சுட்டுபிடிக்கவும் முடியாது சில நடவடிக்கைகளை எடுத்தால் இந்தப் பிரச்சினையை எனது பிரச்சினை எனக் கூறுகிறார்கள் எனத் தெரிவித்தார் .

மேலும் கடற்படை அதிகாரி தெரிவிக்கும் போது எங்களால் துப்பாக்கி முனையால் பிடிக்க முடியாது தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம் எனத் தெரிவித்தார்.

இதன்போது இந்திந மீனவர்களைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்பது தொடர்பில் அடுத்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அறிக்கை சமர்பிக்கவேண்டும் எனக் கூறப்பட்டது. கடற்படையினரும் தமது கடற்படை தலைமையகத்துடன் கதைத்து அறிக்கை தருவதாகத் தெரிவித்தார்.

இதேவேளை இதில் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவு சங் கங்களின் சமாசத்தின் உப தலைவர், இந்திய மீனவர் அத்து மீறல்கள் நிண்டகாலமாக இடம்பெற்றுவருகிறது. இதனை முற்றுமுழுதாக திறுத்துவதற்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பேச்சில் ஈடுபட்டு ஒரு முடிவைக்காண வேண்டும் இதனை விடுத்து யார் எதனை செய்தார்கள் இன்று என்ன நடகிகிறது என்ற போட்டிகள் வேண்டாம் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து பேச்சில் ஈடுபடவேண்டும். - என்றார்.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், சிவஞானம் சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் மற்றும் வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் உள்ளிடவர்கள்கலந்துகொண்டுள்ளதுடன் யாழ்மாவட்டஅரசாங்கஅதிபர்அம்பலவாணர் சிவபாலசுந்தரன் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (05)

# இத்தாலியிலுள்ள இலங்கையர் தொடர்பில் நீதி அமைச்சர் இத்தாலித் தூதுவர் பேச்சு



இத்தாலியில் வாழ்ந்து வரும் இலங்கையர்களுக்கு இந்த நாட்டு வாகன அனுமதி பத்திரத்தை அந்த நாட்டில் பயன்படுத்த அனுமதிக்க இத்தாலி தூதுவர் கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இத்தாலிய தூதுவர் ரீட்டா மனெல்லா மற்றும் நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோருக்கிடையில் நேற்று (புதன்கிழமை) நீதி அமைச்சில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இதற்கான அனுமதியை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

இத்தாலியில் வாழ்ந்துவரும் மற்றும் அங்கு பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுவரும் இலட்சக்கணக்கான இலங்கை மக்களுக்கு இதுவரை நடைமுறை பிரச்சினையாக இருந்து-வந்த சர்வதேச வாகன அனுமதி மத்திரம் பெற்றுக்கொள்வதன் கஷ்டத்தை கருத்திற்கொண்டு, இலங்கையர்களால் நீதி அமைச்சரிடம் மேற்கொண்ட கோரிக்கைக்கு அமைய, அவர்களுக்கு நிவாரணம் ஒன்றை பெற்றுக்கொடுக்கும் வகையில், இலங்கை மக்களுக்கு இந்த நாட்டு அனுமதிக்கப்பட்ட வாகன சாரதி அனுமதி பத்திரத்தை இத்தாலியில் பயன்படுத்துவதற்கு அனுமதி பெற்றுக்கொள்வதற்காக, இத்தாலி தூதுவரிடம் விசேட கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தார்.

இதன்போது குறித்த கோரிக்கைக்கு இத்தாலி தூதுவர் கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இத்தாலி தூதுவர் மற்றும் நீதி அமைச்சர் ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற இந்த சந்திப்பின்போது இலங்கை மற்றும் இத்தாலி நாடுகளுக்கிடையில் இருந்து-வந்த நீண்டகால இராஜதந்திர தொடர்புகளைக் கருத்திற்கொண்டு, இலங்கையில்வசிக்கிறன்ற இத்தாலி நாட்டவர்களுக்கும் இந்த நாட்டில் நடவடிக்கைகளை மேற் கொள்ளும்போது இத்தாலியில் அனுமதிக்கப்பட்ட சாரதி அனுமதி பத்திரத்தைப் பயன்படுத்த இலங்கை அரசாங்கத்தின் இணக்கப்பாட்டைப் பெற்றுத்தருமாறும் தூதுவர் இதன்போது அமைச்சரிடம் கோரியதாக நீதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(05)